www.tamilarangam.net

UNITED
NATIONS

ஐக்கிய
நாடுகள் சபை

T

# Economic and Social Council
பொருளாதார சமூக கவுன்சில்

Distr.
GENERAL
E/CN.4/2006/53/Add.5
27 March 2006
27 மார்ச் 2006
Original: ENGLISH
மூலம்: ஆங்கிலம்

மனித உரிமைகள் பற்றிய ஆணைக்குழு
அறுபத்திரண்டாவது அமர்வு

## காணாமற்போதல் பற்றிய கேள்வியும் விசாரணைகளற்ற கொலைகளும் உள்ளடங்கலாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்.

நீதிக்குப்புறம்பான அல்லது விசாரணைகளற்ற அல்லது எழுந்தமானமான கொலைகள்

ஐ. நா. சபை விசேட விசாரணையாளர் பிலிப் அல்ஸ்டனின் அறிக்கை.

இலங்கை விஜயம் [*] [†]
(நவம்பர் 28 - டிசம்பர் 6, 2005)

[*] இவ்வறிக்கையின் சாராம்சம் எல்லா உத்தியோகபூர்வ மொழிகளிலும் விநியோகிக்கப்படுகின்றது.
[†] தற்போதைய அறிக்கை அண்மைக்கால தகவல்களை உள்ளடக்குவதற்காக தாமதமாகவே கையளிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சாராம்சம்.

28 நவம்பர் முதல் 6 டிசம்பர், 2005 வரை விசேட விசாரணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்தார். இக்காலகட்டத்தில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பெப்ரவரி 2002 யுத்தநிறுத்த ஒப்பந்தம் முன்னொருபோதும் இல்லாதளவு அழுத்ததிற்கு ஆளாகியிருந்தது. இதற்கு சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் ஒரு தனித்த முக்கியமான காரணியாகும். இக்காலகட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிராக போராடும் வெவ்வேறு பிரிவுகளுள் ஒன்றுக்கு ஒன்று எதிராக தமது கருத்து, பேச்சு, நடமாடும் மற்றும் பங்குபற்றும் சுதந்திரம் போன்றவற்றை வெளிப்படுத்தியதன் காரணமாக பல தமிழ், முஸ்லிம் மக்கள் கொலை செய்யப்பட்டனர். அதுமாத்திரமன்றி, ஒரு சாராரின் ‘அனுதாபிகளாக’ இருந்தார்கள் என்பதற்காக மேலும் பலர் கொலை செய்யப்பட்டனர்.

சட்டத்திற்குப் புறம்பான இக்கொலைகள் எதுவுமே முறைப்படி விசாரணை செய்யப்படவில்லை. தமிழர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அல்லது தடுப்புக்காவலில் இருக்கும்போது ஏற்படும் மரணங்கள் பற்றிய பொலிஸ், இராணுவ விசாரணைகள் தகுந்த முறையில் கையாளப்படவில்லை என்பதுடன் எவருமே தண்டிக்கப்படவில்லை என்றே கூறலாம். தமிழீழ விடுதலைப் புலிகளும் பல்வேறு கொலைகளை தாம் செய்யவில்லை என்று எவரையும் திருப்திப்படுத்தாத வகையில் மறுப்பு அறிக்கைகளை வெளியிடுவதுடன், தமக்கு அவை சாதகமாக இருக்கும்பட்சத்தில் அவைகளைப்பற்றி மறுப்பு அறிக்கைகளைகூட வெளியிடுவதில்லை.

மார்ச் 2004 இல் கிழக்கு மாகாணத்தில் புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற “கருணா குழு”, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் ஆதரவாளர்கள் என சந்தேகப்படுபவர்களையும் கொலை செய்தும், பயமுறுத்தியும் பீதிக்குள்ளாக்கியுள்ளது. அவர்களது இம்முயற்சி கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டிருக்கிற இப்பிளவு அவர்களின் தனிப்பட்ட பிரச்சினை என்று இலங்கை அரசாங்கம் சொல்கின்றது. அதேவேளை விடுதலைப் புலிகள் கருணா குழு இராணுவத் துணைப்படையாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாகவும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி அவர்களின் ஆயுதங்களை களைவது அரசாங்கத்தினது பொறுப்பென்றும் கூறுகிறார்கள். இருவரது வாதங்களுமே மேம்போக்கானதும் இலகுபடுத்தப்பட்டதும் என்பதுடன் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு ஏதுவானதல்ல.

இந்நிலமையின் சிக்கலான தன்மை காரணமாகவும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்கீழ் விடுதலைப் புலிகளின் பாத்திரத்தையும் கருத்திற்கொண்டு பொருத்தமான ஒரு சர்வதேச நீதி கட்டமைப்புக்குள் எவ்வாறு பல்வேறு அமைப்புகளதும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தலாம் என்பதையே இவ் அறிக்கை முதன்மைப்படுத்துகிறது.

அது மாத்திரமின்றி பொலிஸ் காவலில் இருந்தபோது ஏற்பட்ட மரணங்களைப் பற்றியும், அதற்கான பின்வரும் காரணங்களைப் பற்றியும் இவ்வறிக்கை ஆராய்கிறது: 1) கிரிமினல் குற்றங்களை விசாரிப்பதற்கு போதிய அல்லது பொருத்தமான பயிற்சியின்மை, 2) சந்தேகநபர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்கு சித்திரவதையை பரவலாகக் கைக்கொள்வது, 3) சித்திரவதை செய்யும் பொலிஸ் அதிகாரிகளின்மீது ஒழுக்காற்று – கிரிமினல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

சமாதான நடவடிக்கைகளிலும் பொதுவான அரசாட்சிமுறையிலும் மனித உரிமைகளே மையமாக இருக்கவேண்டும் என்று வாதிடுவதுடன் இவ்வறிக்கை நிறைவுறுகிறது. தற்போது இவ் அம்சம் சம்பந்தப்பட்ட எந்த தரப்பினராலும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. இலங்கை மக்களைத் தமது பக்கத்தில் வென்றெடுப்பதற்கான போராட்டத்தில், மனித உரிமைகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியத்துவம் கொடுத்து தமது நடவடிக்கைகளையும், எதிர்காலத் திட்டங்களையும் மேற்கொள்பவர்களே வெற்றிபெறுவார்கள் என்பதை இவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

இவ் அறிக்கையின் பிரதான பரிந்துரைகள் வருமாறு:

1. செயலூக்கமுள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பு முறைமை உட்பட பரந்துபட்ட மனித உரிமைகளுக்கான உடன்பாட்டை எட்டுதல்.
2. ஜெனிவா ஒப்பந்தத்தின் விதி 3 இனை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் பின்பற்றுதல்.
3. அரசாங்கம் கருணா குழுவினரோடு கூட்டாக செயற்படுதலை உறுதியாக கைவிடுதல்.
4. இனப்பிரச்சினையின்போது கொல்லப்பட்ட சகல பொதுமக்களுக்கும் உரிய நட்டஈடு வழங்குதல்.
5. சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் அனைத்தையும் பொலிஸார் முறையாக விசாரணை செய்தல்.
6. குற்றவியல் (கிரிமினல்) சார்ந்த விசாரணைகள் மற்றும் புலனாய்வு தொடர்பாக பயிற்சித் திட்டமொன்றை உருவாக்கி உரிய பயிற்சி வழங்குதல்.
7. தமிழ் மற்றும் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவையிலமர்த்தல் - (குறிப்பாக வடக்கு கிழக்கில் சேவையில் ஈடுபடுவதற்கு).
8. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை உடனடியாக நியமித்தலும் அவர்களின் பிரதான நோக்கமாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் மேம்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
9. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான 'ரோம் பிரகடனத்தில்' கைச்சாத்திடல்.
10. மனித உரிமைகளைப்பற்றி தாம் அக்கறையுடையவர்கள் என்பதை வெளிப்படுத்த விடுதலைபுலிகள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தல். அவர்கள் தாம் செய்யவில்லை என்று மறுக்கும் கொலைகள் உட்பட, எல்லாப் படுகொலைகளையும் உறுதியாக கண்டிக்க வேண்டும்.
11. தமிழீழ விடுதலைப் புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதை தவிர்க்கவேண்டும் என்பதுடன் தமக்குச் சார்பாகச் செயற்படும் ஆயுதந்தரித்த மக்கள் படைகளுடன் சேர்ந்து இயங்குவதையும் தவிர்க்கவேண்டும்.
12. இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் (Sri Lanka Monitoring Mission – SLMM) மனித உரிமை வேலைகளைப் பலப்படுத்தலும் விரிவுபடுத்துதலும்.
13. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் குறிப்பிடத்தக்க புலம்பெயர் தமிழர்களை கொண்ட நாடுகளின் அரசாங்கங்கள் அந்நாட்டில் வதியும் தமிழர்களுடன் மனித உரிமைகள் அடிப்படையிலான கலந்துரையாடல்கள் முன்னெடுத்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீதிக்குப்புறம்பான அல்லது விசாரணைகளற்ற அல்லது
எழுந்தமானமான கொலைகள் பற்றிய
ஐ. நா. சபை விசேட விசாரணையாளரின் அறிக்கை.

பிலிப் அல்ஸ்டன்

இலங்கை விஜயம்

## உள்ளடக்கம்


| | | பந்தி | பக்கம் |
|---|---|---|---|
| I. | அறிமுகம் …………………………………………………… | 1 - 3 | 6 |
| II. | தொடரும் படுகொலைகளை நிறுத்துதல் ……………………... | 4 - 49 | 6 |
| | அ) யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னான கொலைகளின் பரிமாணங்களும் காரணங்களும் ………………………... | 4 - 23 | 6 |
| | 1. மோதல்கள் ………………………………………… | 7 | 7 |
| | 2. யுத்தநிறுத்தமும் அதன் பின் நடந்த கொலைகளும் | 8 - 10 | 7 |
| | 3. தமிழ் அரசியற் கட்சிகளும் "துணைப்படைகளும்" | 11 - 13 | 8 |
| | 4. கருணாவின் பிளவு ………………………………….. | 14 - 19 | 9 |
| | 5. பொதுமக்களை பயன்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் | 20 | 11 |
| | 6. தமிழ் மக்களை கட்டுப்படுத்துவதற்காக செய்யப்படும் கொலைகள் | 21 - 23 | 11 |
| | ஆ. நாசகார சக்திகளை கட்டுப்படுத்தும் சர்வதேச சட்டவியல் அமைப்பு | 24 - 33 | 12 |
| | இ. யுத்தநிறுத்தகாலத்தில் பொலிஸ் புலன் விசாரணைகளின் தோல்வி | 34 - 37 | 15 |
| | ஈ. இலங்கை கண்காணிப்புக் குழுவின் பிரச்சினைகளும் அதனுடைய பங்கும் | 38 - 41 | 16 |
| | உ. சர்வதேச கண்காணிப்பு - மாற்றுவழிகள் (options) | 42 - 47 | 17 |
| | ஊ. மீறல்கள் கறாராகக் கண்டிக்கப்படவேண்டும் | 48 - 49 | 19 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | பந்தி | பக்கம் |
|---|---|---|---|
| III. | தடுப்புக் காவல் மரணங்களும் தண்டனைகளிலிருந்து தப்பும் உரிமையும் (Deaths in custody and Impunity) | 50 - 65 | 20 |
| | அ) அறிமுகம் …………………………………………………….. | 50 - 52 | 20 |
| | ஆ) பொலிஸ் காவலிலிருக்கும்போது ஏற்படும் மரணங்கள் (Deaths in police custody) | 53 - 58 | 21 |
| | இ) தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் நிலைமையால் ஏற்படும் விளைவுகள் | 59 - 61 | 23 |
| | ஈ) சுதந்திரமான மேற்பார்வை அமைப்புக்கள் | 62 - 65 | 24 |
| IV. | இன்றைய வெற்றிகளை நாளைய பொழுதுக்கும் தக்கவைத்துக் கொள்ளுதல் | 66 - 70 | 26 |
| V. | பரிந்துரைகள் ………………………………………………………….. | 71 - 90 | 27 |
| | அரசாங்கம் …………………………………………………………….. | 74 – 75 | 28 |
| | பொலிஸார் …………………………………………………………….. | 76 – 79 | 29 |
| | தேசிய பொலிஸ் ஆணைக்குழு (National Police Commission) | 80 – 82 | 29 |
| | சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சட்டம் (ICC Statute) ………. | 83 | 29 |
| | தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E) ……………………….. | 84 – 86 | 30 |
| | சர்வதேச சமூகம் ……………………………………………….... | 87 – 89 | 30 |
| தொடர்-கண்காணிப்பு ……………………………………………….. | | 90 | 30 |
| குறிப்புகள் ……………………………………………………………………………… | | | 31 |
| பின்னிணைப்பு: பயணத்தின் நிகழ்ச்சித் திட்டம் ……………………………………... | | | 40 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# I. அறிமுகம்

1. சட்டத்திற்குப் புறம்பான கொலைகள்[1] தொடர்பான இலங்கை நிலவரத்தைப்பற்றி இவ்வறிக்கை விபரிக்கிறது. 28 நவம்பர் முதல் 6 டிசம்பர் 2005 வரையான காலப்பகுதியில் அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்கள், கலந்துரையாடல்கள், விரிவான நேர்காணல்கள் போன்றவற்றின் அடிப்படையிலே இது தயாரிக்கப்பட்டது. எனது பயணம் குறித்து இலங்கை அரசாங்கம் வெளிப்படையான போக்குடன் அணுகியதுடன் உபயோகமான பல ஒத்தாசைகளை வழங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பலரை நான் சந்திப்பதற்கோ பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாக விஜயம் செய்வதற்கோ அரசாங்கம் எவ்விதத் தடையும் விதிக்கவில்லை. குறிப்பாக, அப்போது வெளிவிவகார அமைச்சராகவிருந்து, ஆகஸ்ட் 2005ல் அரசியற் படுகொலை செய்யப்பட்ட, மதிப்பிற்குரிய காலஞ்சென்ற திரு. லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களுக்கு விசேடமாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இவ் விஜயம் தொடர்பான முழு விபரத்தையும் பின்னிணைப்பு 1 தருகிறது.

2. எனது நோக்கம் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற படுகொலைகளைப் பற்றிய விபரக்கொத்தொன்றை தயாரிப்பதல்ல. அந்த முயற்சியில் வேறு பல குழுக்கள் ஈடுபட்டுள்ளன. அவர்கள் வெளியிடும் தகவல்களும் தரவுகளும் பெருமளவுக்கு சரியானவையும் கூட. ஆனால் எனது நோக்கம் இக்கொலைகளின் பரிமாணத்தை ஆராய்ந்து அதனூடாக நிலமையைச் சீர் செய்வதற்குரிய வழிவகைகளை முன்வைப்பதாகும். நான் தங்கியிருந்த காலப்பகுதியிலும், உடனடியாக அதன் பின்னரும் இப்படுகொலைகள் மிக அதிகமாக நிகழ்ந்தன. அதன் பலனாக தற்போது நிலவும் சூழ்நிலை பலவீனமானதாகவும் மிகவும் அபாயகரமாகவும் உள்ளது.

3. இந்தப் படுகொலைகள் பற்றிய பிரச்சினை, பல வழிகளில், இலங்கையின் ஒட்டுமொத்த நிலமை தொடர்பாக முக்கியமான பன்முகப்பட்ட தகவல்களைத் தருகின்றன. பரவலாகக் கையாளப்படுகின்ற பொலிஸ் சித்திரவதை, இராணுவத்தினால் செய்யப்படும் அல்லது சகித்துக்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கத் தவறியமை, ஆயுதந் தாங்கிய குழுக்களால், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளால் தம்மை ஆதரிக்காத தமிழர்களைக் கொல்வதற்கும், இராணுவத்தை ஆத்திரமூட்டுவதற்குமென மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட படுகொலைகளாக இவை வெளிப்படுகின்றன. ஆனால் மனித உரிமைகளை மையப்படுத்தாத சமாதான முயற்சிகள் தோல்வியுறும் என்ற உண்மையை சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினருமே முழுமையாக விளங்கிக் கொள்ளவில்லை.

# II. தொடரும் படுகொலைகளை நிறுத்துதல்

## அ) யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னான கொலைகளின் பரிமாணங்களும் காரணங்களும்

4. இலங்கையில், மோதலில் ஈடுபட்டுள்ள இருசாராராலும் ஆயுததாரிகளும் பொதுமக்களும் வேண்டுமென்றே கொல்லப்படுகிறார்கள். 2002ம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தமானது இவ்விரு வன்முறைகளைக் குறித்தும் கவனஞ்செலுத்தி, இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் “ஆயுதமேந்திய இருசாராருக்கும் எதிரான இராணுவ நடவடிக்கைகளையும்”, “பொதுமக்கள் மீதான வன்செயல்களையும்” கைவிடுமாறு குறிப்பிட்டது. 2005 டிசம்பர்வரை ஒருசில மீறல்களைத் தவிர இரு தரப்பினரும் ‘தமக்கிடையேயான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துதல்’ என்ற யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்தை பெருமளவு கடைப்பிடித்தனர். ஆனால், பொதுமக்கள் மீதான வன்முறையோ “அரசியற் படுகொலைகளின்” வடிவில் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அரசியற் படுகொலைகளை மதிப்பிடமுடியாது. 2002ம் ஆண்டுமுதல் இறந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கானவையே அன்றி ஆயிரக்கணக்கானவை அல்ல. இது, ''இவைகள் எண்ணிக்கையடிப்படையில் அதிகமானவை'' என்றோ அல்லது ''இவைகள் நேர்த்தியில்லாத ஆனால் நடைமுறைச் சாத்தியமான சமாதானம் என்றளவில் சகஜமானவை'' என்றோ புறக்கணித்துவிடத் தூண்டக்கூடும். இருந்தபோதிலும் அரசியற் படுகொலைகள் சமூகத்தின்மீது செலுத்தும் தாக்கமானது ஒப்பீட்டளவில் தற்செயலான யுத்தநிறுத்த மீறல்களினால் ஏற்படும் மரணங்களினால் அல்லது பொதுவான குற்றச் செயல்களால் ஏற்படும் பாதிப்பைவிட மிகவும் அதிகமாகும். சமூகங்களை ஒடுக்கி, பிளவுகளை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் ஆதாயம் தேடுவதே இக்கொலைகளின் நோக்கம். கருத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், அமைப்புகளிலும் பொதுவிடயங்களிலும் பங்குபற்றும் சுதந்திரம் போன்றவற்றை கைக்கொள்வதற்காக இன்று பலர் - பெரும்பாலும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் - கொலை அச்சுறுத்தலை அன்றாடம் எதிர்கொள்கிறார்கள். பல்வேறு வகைப்பட்ட மனித உரிமைகளை இந்த அரசியற் படுகொலைகள் மறுதலிக்கின்ற காரணத்தினாலேயே, சிவில் சமூகத்தினர் மற்றைய எல்லா விடயங்களையும்விட இந்த அரசியற்படுகொலைகளை முக்கியப்படுத்துகிறார்கள்.

6. யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அரச படைகளின்மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதல்களை நான் அங்கிருந்த காலப்பகுதியின் இறுதி நாட்களின்போது கண்டேன்.[2] அதன்பின்னர் அவ்வாறான மேலும் பல தாக்குதல்கள் நடந்துள்ளன. யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு (Sri Lanka Monitoring Mission - SLMM) எச்சரித்துள்ளவாறு உண்மையிலேயே "யுத்தநிறுத்தம் அச்சுறுத்தப்பட்டுள்ளது" என்பதுடன் "மீண்டுமொரு யுத்தம் வெகுதூரத்தில் இல்லை"[3]. இந்நிலமை வலுவாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் இலங்கை மக்களின் உயிர்வாழும் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டுமானால் சமாதானத்தை மிகவும் கண்டிப்பாக நிலைநாட்டுவது அவசியமாகும். நிலமை இவ்வாறு இருக்கின்றபோதும் இவ்வறிக்கையின் பிரேரணைகள் பொருத்தமானவை: சட்டவிரோதமான படுகொலைகளை யுத்தநிறுத்த ஒப்பந்தம் நிறுத்தவில்லை என்பதுடன் இந்த மோதல்களின் போக்கு எவ்வாறிருப்பினும் சட்டவிரோதமான படுகொலைகள் தொடருமென்றே தெரிகிறது.

## 1. மோதல்கள்

7. இந்த மோதலில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பினர் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளுமாகும். இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழீழம் என்கின்ற தனிநாடொன்றை ஏற்படுத்தும் நோக்குடன் 1970களின் பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்துடன் போரிடத் தொடங்கியது.[4] பெப்ரவரி 2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்தத்தின்போது வடக்கு, கிழக்கில் குறிப்பிடத்தக்க பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2005 டிசம்பர்வரை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடி மோதல்கள் மிகவும் அரிதாகவிருந்தன. சமாதான ஒப்பந்தத்தின் பின் கொலை செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் இராணுவத்தினராகவோ விடுதலைப் புலிகளாகவோ இருக்கவில்லை. விடுதலைப் புலி உறுப்பினர்கள் இலங்கை இராணுவத்தினரைச் சுடும் சந்தர்ப்பங்களில் அதனை ஒரு ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகவே இராணுவத்தினர் கருதினரேயன்றி மீண்டும் யுத்தத்திற்குச் செல்லுவதற்கான நோக்கமாக கருதவில்லை.

## 2. யுத்தநிறுத்தமும் அதன் பின் நடந்த கொலைகளும்

8. இலங்கையில் இன்று நிகழும் அரசியற் பிணக்குடன் தொடர்புடைய கொலைகளை பெப்ரவரி 2002ல் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையிற்தான் நோக்கவேண்டும். ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட இரு சாராரும் தத்தமது நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கு ஒப்பந்தத்தில் தெளிவாக வரையறுக்கப்படாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதிகளைப் பயன்படுத்திக்கொள்ள முனைவதுடன் கண்காணிப்புக் குழுவான இலங்கை கண்காணிப்புக் குழுவின் (Sri Lanka Monitoring Mission - SLMM) பலவீனத்தையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கொலை செய்வதன்மூலமும் அதனை அனுமதிப்பதன் மூலமும் இருதரப்பினரும் தமது நோக்கத்தை குறிப்பிடத்தக்களவு பூர்த்தி செய்துகொள்கிறார்கள்.

9. நான் அரசாங்க உத்தியோகத்தர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசியபோது படுகொலைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சரத்தினை மீறும் செயலென்று ஏற்றுக் கொண்டார்கள். ஒரு தரப்பினர் ஒப்பந்தத்தின் ஒரு சரத்தை மீறுவது மற்றைய தரப்பினர் அதன் இன்னொரு சரத்தினை மீறுவதை நியாயப்படுத்துகிறது என்று இங்கு மறைமுகமாகக் கூறப்பட்டது. இந் நியாயப்படுத்தல்கள் சட்ட அடிப்படையற்றவை என்ற பொழுதும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் நிகழும் படுகொலைகளுக்குப் பின்னாலுள்ள தர்க்கத்தைப் புரிந்து கொள்வதற்கு இது அவசியமானது.

10. இவ்வாறான படுகொலைகளின் சரியான எண்ணிக்கையைத் தீர்மானிப்பது கடினம். எந்தப் படுகொலைகளும் பலன் தரக்கூடியமுறையில் விசாரணைசெய்யப்படவில்லை என்பது மாத்திரமன்றி தனிப்பட்ட கொலைகளையும் இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அரசியற் படுகொலையையும் வேறுபடுத்துவது சிலவேளைகளில் கடினம்தான். நான் பெற்ற தரவுகளின்படி அதிகபட்சம் துல்லியமான கணக்கீடாக 2005இல் 300க்கும் அதிகமான அரசியற் படுகொலைகள் நிகழ்ந்திருக்கலாம்.[5]

## 3. தமிழ் அரசியற் கட்சிகளும் “துணைப்படைகளும்”

11. மோதலின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போல் வேறு பல தமிழ் இராணுவ அமைப்புகளும் போராடிவந்தன. இருந்தபோதிலும் 1980களில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக இவ்வமைப்புகளைத் தாக்கி அவற்றின் உறுப்பினர்களைக் கொன்றனர். இதன் பயனாக இவற்றுள் சில அமைப்புகள் இந்திய அமைதி காக்கும் படையுடன் (Indian Peace Keeping Force – IPKF 1987-1990) ஒத்துழைக்கவோ அல்லது இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்க்கவோ போயினர். பலர் தேர்தல் அரசியலைத் தேர்ந்தெடுத்தனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 சரத்தானது “தமிழ் துணைப்படையின்” ஆயுதங்களை அரசாங்கம் களையவேண்டும் என்றும் இராணுவத்தினுள் இணைக்கப்பட்டவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியிடத்துக்கு இடமாற்றப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.[6] இவ்வமைப்புகளின் பிரதிநிதிகள் - குறிப்பாக EPDP, EPRLF, PLOTE – தமது ஆயுதங்கள் களையப்பட்டிருப்பதாகவும் தற்போது தாம் அரசியற் கட்சிகளாகவே இயங்குவதாகவும் என்னிடம் குறிப்பிட்டனர். இருந்தபோதிலும் இச்சரத்து நேர்த்தியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. உதாரணமாக அரசாங்க அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியபடி EPDPயின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் ஆயுதங்களுடன் இயங்குகின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தமானது அரசாங்கம் இவ்வமைப்புகளிடமிருந்து ‘ஒரு - தடவை’ ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றே குறிப்பிடுவதாகவும் இவ்வமைப்புகள் மீண்டும் ஆயுததாரிகளாவதைத் தடுப்பது அரசின் கடமையல்ல என்றும் பல அரசாங்க அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர்.

12. இந்நிலை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அதே நேரத்தில், இவ் அமைப்புகளின் அநேக அங்கத்தினர்கள் இராணுவச் செயற்பாடல்லாத அரசியல் வேலைகளை தவிர்ந்தவேலைகளைச் செய்கின்றார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. எனவே இவ்வமைப்புகளை “அரசியற் கட்சிகள்” என்றழைக்காது கண்மூடித்தனமாக “இராணுவத் துணைப்படை” என்று அழைப்பது அபாயகரமான திரிபுபடுத்தலாகும். இவ் அமைப்புகள் தொடர்ந்து குறி வைக்கப்படுவதனால் அவர்கள் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பைக் கோரும் நிலமையையும் அதன் காரணமாக அவர்கள் தமது வசிப்பிடங்களையும் கட்சி அலுவலகங்களையும் இராணுவநிலைகளை அண்டி அமைக்கும்படியும் நிர்ப்பந்திக்கிறது. இது இவ்வமைப்புகள் இலங்கை இராணுவத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துணைபோவதான ஒரு தோற்றத்தை கொடுக்கின்றபோதிலும் நிலமை எப்போதும் அதுவல்ல. அதேசமயத்தில் குறித்த சில சந்தர்ப்பங்களில் இக்குற்றச்சாட்டு முழுமையாக மறுக்கப்பட முடியாததாகவும் இருக்கிறது.

13. இவ்வமைப்புகளின் உறுப்பினர்கள் கொல்லப்படுவது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரும் தொடர்ந்து நிகழ்கிறது. பெரும்பாலான சந்தர்ப்ப சாட்சியங்கள் இப்படுகொலைகளை தமிழீழ விடுதலைப் புலிகளே செய்திருப்பதாகக் காட்டுகின்றன. இவற்றுள் சில கொலைகள் இராணுவரீதியான மேலாதிக்கத்தைப் பெறும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கலாம் என்றபோதிலும் பெரும்பாலானவை தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மைத் தாமே பிரகடனம் செய்துகொண்டுள்ள "தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி" அந்தஸ்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். தொடர்ந்து குறிவைக்கப்படும் இவ்வமைப்புகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் "பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்" என்ற 2.1ம் சரத்து தமக்கு தேவையான அதிகபட்ச பாதுகாப்பைத் தரவில்லை என்று கூறுவது நியாயமே.

## 4. கருணாவின் பிளவு

14. மார்ச் 2004ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேர்ணல் கருணா தமிழீழ வடுதலைப் புலிகளின் வடக்கு மாகாணத் தலைமையிலிருந்து பிரிந்தார். ஆரம்பத்தில் ஏறத்தாள நாலிலொரு பங்கு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் அவருடன் சென்றனர். இவர்களைக் குறிப்பிடுவதற்கு பல பெயர்கள் வழங்கிவருகின்றபோதும் பொதுவாக கருணா குழு என்று அழைக்கப்படுகிறார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பல பிரதேசங்கள் தற்போதும் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றபோதும் அப்பிரதேசங்களைக் கருணா குழு தாக்கி புலி உறுப்பினர்களையும் அரசியல் பிரதிநிதிகளையும் ஆதரவாளர்களையும் கொன்றிருக்கிறது. இந்நடவடிக்கையானது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலையை பலவீனப்படுத்தி அங்கிருந்த அலுவலகங்களை மூடப் பண்ணியதுடன் அவர்களது அரசியல் வேலைகளையும் முடக்கியது.[7] தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்பகாலம் தொடக்கம் இலங்கையின் வடக்கு, கிழக்கு இணைந்த பிரதேசத்தையே தமிழீழம் என்று பிரகடனப்படுத்தி வந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் தற்போது கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான 'சமரில்' அவர்கள் ஈடுபடவேண்டிய நிலையில் உள்ளனர். அண்மைக்காலத்தில் நடந்த பல கொலைகள் அதனுடன் சம்பந்தப்பட்டவையாக உள்ளன.[8]

15. கருணா குழுவைப் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் கூறும் கருத்துக்கள் காலத்திற்குக் காலம் மாறுகிறது. பிளவு ஏற்பட்ட சமயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அது தமது 'தனிப்பட்ட உள்விவகாரம்' என்று சாதித்தார்கள். ஆனால் நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசியபொழுது கருணா குழு அரசாங்கத்திடம் உதவி பெறுகின்ற "தமிழ் துணைப்படை" என்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி அவர்களது ஆயுதங்களைக் களைவது அரசின் பொறுப்பாகும் என்றும் கூறினார்கள். இதற்கு ஆதாரமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கருணா குழுவிடமிருந்து பிரிந்து வந்தவர்களென கூறப்பட்ட சிலரது வாக்குமூலங்களைக் குறிப்பிட்டார்கள். அவ்வாக்குமூலங்களில் ஆயுதங்கள் உட்பட இயங்குவதற்கான உதவிகளை இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் வழங்குவதாகவும் நிதியுதவியானது "ஒரு வெளியிடத்திலிருந்து" கிடைப்பதாகவும் கருணா குழு பல அரசாங்க அமைச்சர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் அந்நபர்கள் கூறியிருந்தார்கள்.[9] இக் குற்றச்சாட்டுகளின் நம்பகத்தன்மை ஒருபுறமிருக்க (கீழே பார்க்க), கருணா குழுவைப்பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளமுடியாதது. அரசாங்கம் கருணா குழுவினருக்கு ஏதாவது வழியில் உதவுகின்றது என்பது ஒருபுறமிருக்க, அவர்களின் ஆயுதங்களைக் களைவதென்பது அரசாங்கத்தினால் முடியாதென்பதுதான் யதார்த்தமானது. அத்துடன் ஒரு முழுமையான மீளாய்வு செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றிற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முயற்சிகள் கருணா குழுவினரால் உருவாக்கப்பட்ட தள யதார்த்தத்தை உள்வாங்குவதன் மூலமே ஏதுவாகும்.

16. கருணா குழு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடும் பிரச்சினைக்குரியதே. முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க அவர்கள், புலனாய்வுத் துறை அதிகாரிகளைத் தவிர வேறு எவரும் கருணாவுடன் எவ்விதத் தொடர்பும் வைத்திருக்கக் கூடாது என்று கட்டளையிட்டிருந்ததாக என்னிடம் பல இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள். அக்கட்டளையின் பிரதியொன்றைப் பெறுவதற்கு நான் முயற்சித்தபோதும் அது கிடைக்கவில்லை. அதிகார ரீதியாக இவ்விதமான தொடர்புகள் இருப்பதற்கான சான்றுகள் இல்லையெனினும் குறைந்தபட்சம் அதிகாரப் பற்றற்ற ரீதியிலாவது அரச படையினருக்கும் கருணா குழுவினருக்குமிடையே தொடர்புகள் இருந்தனவென்பதற்கு பலமான சந்தர்ப்ப சாட்சியங்கள் உள்ளன. கருணா குழுவினரால் கடத்தப்பட்ட சிலர் பின்னர் இராணுவ முகாமில் வைத்து விடுவிக்கப்பட்டதாக சிவில் சமூக அமைப்பினர் விபரித்தனர். கடத்தப்பட்ட ஒருவரை கருணா குழு உறுப்பினர் ஒருவர் இராணுவ வாகனத்தில் ஏற்றிச் சென்றதைக் கண்டதாகவும் நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்தன. இரு தரப்பினருமே (வன்னி அல்லது கருணா) பயங்கரவாதிகள் என்றும் இதனால் இருவரையும் அரசாங்கம் வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்ற வாதத்திலும் உண்மையில்லை. பல இராணுவ, பொலிஸ், விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடையே தோன்றிய பிளவு அரசாங்கத்திற்கு நன்மையானது என்று என்னிடம் தெரிவித்தார்கள். (கொல்லப்படும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை பிளவின் பின் கணிசமானளவு அதிகரித்திருக்கிறது.) தந்திரோபாயரீதியில் ஏற்படும் தாக்கங்கள் ஒருபுறமிருக்க இரு தரப்பினரும் பொதுமக்களைப் பொருட்டாகக் கொள்ளாததால் இப்பிளவின் பயனாக பல பொதுமக்கள் கிழக்குப் பிரதேசத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

17. 2005 நவம்பர் 18 இல் இடம்பெற்ற அக்கரைப்பற்று பள்ளிவாசல் தாக்குதலானது மோதல்களின்போது பொதுமக்கள் எவ்வாறு அகப்பட்டுக் கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். அதிகாலைத் தொழுகையின்போது பள்ளிவாசலின்முன் இருவர் கிரனெட்டுகளை வீசியதால் அங்கிருந்த பொதுமக்கள் 6 பேர் மரணமடைய 29 பேர் படுகாயமடைந்தனர்.[10] நான் அப்பள்ளிவாசலுக்கு சென்று காயமடைந்தவர்களைச் சந்தித்ததுடன் அச்சமூகப் பிரதிநிதிகளுடனும் உரையாடினேன். இத்தாக்குதலைப்பற்றி அரசாங்க அதிகாரிகளுடஞம் விடுதலைப் புலி பிரதிநிதிகளுடனும் உரையாடினேன்.

18. சம்பவத்தைப்பற்றிய விபரிப்புகள் ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபட்டாலும் அவை எல்லாவற்றிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவிற்கும் இடையேயுள்ள மோதலே பிரதானமான இருந்தது. உதாரணமாக, தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பிரச்சினையை உருவாக்குதற்கு கருணா குழு முனைவதாக ஒரு சாரார் விளக்கினர்.[11] இரு தரப்பினருக்கும் இடையில் நிகழும் தொடர் தாக்குதல்களில் இதுவும் ஒன்று என்று இன்னொரு விளக்கம் கூறப்படுகிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர் இரண்டு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் உடல்கள் முஸ்லிம்கள் வாழும் கிராமத்தையும் தமிழர்கள் வாழும் கிராமத்தையும் பிரிக்கும் (உத்தியோகபூர்வமற்ற) எல்லையில் காணப்பட்டது. சில முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் கருணா குழுவினருக்கு ஆதரவான ஒருசில முஸ்லிம்களினால் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறினார்கள். பொதுவாக முஸ்லிம் சமுகத்தவர்கள் புலிகளின் இரு பிரிவினருடனும் எதுவிதத்திலும் தொடர்புகளைத் தவிர்த்துவந்துள்ளபோதும் தமிழீழ விடுதலைப் புலிகள் பள்ளிவாசலைத் தாக்கிய சம்பவமானது எதிர்காலத்தில் முஸ்லிம்கள் எவரும் கருணா குழுவிற்கு ஆதரவளிப்பதை தடுப்பதற்கான மிரட்டலே என்று பல முஸ்லிம்கள் தெரிவித்தனர்.

19. காத்திரமான விசாரணை செய்யப்படாமல் தாக்குதலுக்கு நிச்சயமாகப் பொறுப்பானவர்களை தீர்மானிப்பது கடினம். இருந்தபோதிலும், புலிகள் பழிவாங்கும் தாக்குதல்களில் ஈடுபடுவதுண்டு என தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமான வட்டாரங்கள் எனக்கு உறுதிப்படுத்தினர். கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் கொலைகள் பலவற்றை அப்

www.tamilarangam.net

பழிவாங்கும் படலத்தின் பின்னணியிலேயே பார்க்கவேண்டும். இவ்வாறான தாக்குதல்கள் உரிமை கோரப்படாமல் விடப்படுவது மேலும் பதட்டத்தையே ஏற்படுத்துகிறது. பள்ளிவாசல் தாக்குதலின் பிறகு மோதல்கள் வெடித்தன. இவ்வாறான தாக்குதல்கள் நிகழும்பொழுது அவை சரியாக விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகள் இனங்காணப்படாதவிடத்து அது எப்போதும் பதில் தாக்குதல்களையும் மக்களிடையே சந்தேகத்தையும் வெறுப்பையுமே விதைக்கும்.

## 5. பொதுமக்களை பயன்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள்

20. நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்திப்பதற்கு கிளிநொச்சிக்கு செல்வதற்கு முதல்நாள் கிளைமோர் குண்டுவெடிப்பில் ஆறு இலங்கை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டனர். (நான் இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னர் இத்தகைய தாக்குதல்கள் அதிகளவு நிகழ்ந்துள்ளன.) நான் கிளிநொச்சியில் இருந்தபோது இக்கொலைகளைப்பற்றி எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தேன். இத்தாக்குதல்களில் புலிகளினால் அண்மைக்காலத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ள பொதுமக்களும் பங்களித்திருக்கலாம் என்ற விடயம் மறுதலிக்கப்படவில்லை. அண்மைக்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சிக்கு வருமாறும் 'பொதுமக்கள் தற்காப்பு பயிற்சி' பெறுமாறும் அழைத்துள்ளனர். இம்மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாக கட்டளையிடுகிறார்கள் என்ற கருத்து மறுக்கப்பட்டாலும், இவர்கள்மீது புலிகளிற்கு குறிப்பிடத்தக்களவு ஆதிக்கம் இருக்கின்றது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவர் சமாதானப் பேச்சுவார்த்தை மிகவும் மெதுவாக நிகழ்வதால் பொதுமக்கள் விரக்தியடைந்துள்ளனர் என்றும் அதனால் இவ்வாறான தாக்குதல்களில் அவர்கள் ஈடுபடுவது தவிர்க்கமுடியாதது என்றும் என்னிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் 'யாழ்ப்பாண நிலைமைகள் கட்டுப்படுத்தமுடியாதவை', ஏனெனில் புலிகளின் அரசியல்பிரிவு உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளமையால் "அம்மக்களின்மீது இருப்பதாக தாம் கூறிக்கொள்ளும்" தங்களது செல்வாக்கைச் செலுத்தமுடியாதிருப்பதாகக் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாறு துணைக்குழுக்களை வெளிப்படையாகப் பயன்படுத்துவது மிக அபாயகரமானதொரு ஏற்பாடாகும்.

## 6. தமிழ் மக்களை கட்டுப்படுத்துவதற்காக செய்யப்படும் கொலைகள்

21. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் நிகழும் வன்முறைகளில் மிகவும் கலக்கம் தருவது என்னவெனில் தமிழ் சமூகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் படுகொலைகளாகும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 2.1வது சரத்து 'சர்வதேச சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட இரு சாராரும் பொதுமக்களின்மீது வன்முறைகளில் ஈடுபடாதிருக்கவேண்டும்' என்று குறிப்பிடுகிறது. உண்மையிலே சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் யாவும் அவ்வாறான தாக்குதலை மிக வன்மையாக எதிர்க்கின்றன. ஆயினும் பிரதானமாக தமிழீழ விடுதலைப் புலிகளும், ஒரு சிறிய அளவில் வேறு குழுக்களும் தமிழ்ப் பொதுமக்கள் மீது தமது அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவையும் செல்வாக்கையும் நிலைநாட்டுவதற்காக வன்முறைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

22. தமிழ் சமூகத்திலுள்ள தமது அரசியல் எதிர்ப்பாளர்களை 'துரோகிகள்' என்று வரையறை செய்வதும் அவர்களைக் கொலை செய்வதனூடாக பொதுமக்களை மிரட்டி தமக்குப் பணியவைப்பதுமான தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்கையானது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும். அரசாங்கங்களும் ஆயுதமேந்திய அமைப்புகளும் மனித உரிமைகளை மதித்து நடப்பதனூடாக தமது ஆளுமைக்குட்பட்ட மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஒரு தேவை இருக்கிறது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பொருளாதார,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் பலத்திற்கு தமது நேரடி வன்முறைகளுக்கு ஆளாகாமல் தப்பி வெளிநாடுகளில் வாழும் ஆதரவாளர்களிலேயே பெரிதும் தங்கியிருக்கிறார்கள். அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளில் வாழும் 800,000 பேரளவில் உள்ள புலம்பெயர் இலங்கைத் தமிழ்மக்களே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுத் தளமாக உள்ளனர்.[12]

23. புலம்பெயர் தமிழ் மக்களின் பிரச்சினை என்னவெனில், புலிகளின் இருவேறுபட்ட முகங்களை வேறுபடுத்திப் பார்க்காமல் சமரசம் செய்து கொள்வதாகும். கிளிநொச்சியில் புலிகளின் அமைப்பு இயந்திரம் அரச நிர்வாகம், நீதித்துறை, காவல்துறை போன்ற விடயங்களில் ஒரு கவர்ச்சிகரமான பரிட்சார்த்தத்தில் ஈடுபட்டிருக்கின்றதென்ற ஒரு தோற்றப்பாட்டைக் கொடுக்கலாம். அவர்கள் உருவாக்கியுள்ள வடக்கு கிழக்கு மனிதஉரிமைச் செயலகம் (NESOHR) மூலம் மனித உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்வதாகவும் தோன்றும். ஆனால், நடைமுறையில் புலிகளின் செயற்பாடானது - குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் - பொதுவாக பிரச்சினையிலிருந்து விலகியிருக்கிற அம்மக்களை, மிரட்டுதல், பலவந்தப்படுத்துதல், தாக்குதல் மற்றும் கொலை செய்தல் போன்றவையாக இருக்கிறது.[13] புலம்பெயர் தமிழ்மக்கள் தாம் வழங்கும் ஆதரவோடு நிகழும் இவ்வன்முறைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதுமட்டுமல்ல மனித உரிமைகளைப் பேணுவதற்கு ஆக்கபூர்வமாக அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும். இதுவொரு ‘விடுதலைப் போராட்டம்’ என்றளவில் இப்பிரச்சினையை நோக்குபவர்கள்கூட அப்பாவிப் பொதுமக்களும் ஆயுதம் தாங்காதவர்களும் கொலை செய்யப்படுவதை உறுதியாக எதிர்க்கவேண்டும். புலம்பெயர் தமிழ்மக்கள் வழங்கும் பலமான பொருளாதார, அரசியல் ஆதரவின் அடிப்படையில் அப்பாவிப் பொதுமக்களை பீதிக்குள்ளாக்குவதையும் கொலைசெய்வதையும் நிறுத்துவதற்கும் மனித உரிமையைப் பேணுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கும் அவரவர் வாழும் நாடுகளின் அரசாங்கங்கள் அவர்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவை எட்டுவதற்கு இவ்வறிக்கை கண்டறிந்தவற்றைப் பயன்படுத்தலாம்.

## ஆ. நாசகார சக்திகளை கட்டுப்படுத்தும் சர்வதேச சட்டவியல் அமைப்பு

24. அண்மைக்காலத்து அரசியற் படுகொலைகளைப்பற்றி பேசும்பொழுது இலங்கையில் அவை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே பேசப்படுகின்றன. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினைக் கடைப்பிடிக்க முயலும்பொழுது அது பொருத்தமான ஒரு கட்டமைப்பாக (framework) திகழுகின்ற அதேவேளை சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டவிதிகளும் மதிக்கப்பட வேண்டும். சிலவேளைகளில் தெளிவான கடப்பாடுகளை விதிக்கின்றனவாக அவையே இருக்கின்றன.

25. மனித உரிமைகள் பற்றிய சட்டமானது இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கையில் வாழும் சகல மக்களதும் உரிமைகளை மதித்துப் பேண வேண்டும் என்று கூறுகிறது. மனித உரிமை 3 கட்டங்களில் செயற்படுகிறது - தனிநபர்களது உரிமைகள், மனித உரிமைகள் குறித்த அரசாங்கத்தின் கடப்பாடு, மற்றும் சர்வதேச சமூகத்தின் நியாயமான எதிர்பார்ப்பு என்பனவாகும். இலங்கை அரசாங்கம் சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனத்தில் (ICCPR) கைச்சாத்திட்டதன்மூலம் அதனை மதித்துப் பேணும் சட்டபூர்வமான கடப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளது. ஓர் அரசு நிலையிலில்லாத தமிழீழ விடுதலைப் புலிகள் ICCPR தொடர்பாக சட்டபூர்வமான கடப்பாடுடையவர்கள் அல்லாதபோதும் அடிப்படை சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின்படி சர்வதேச சமூகத்திற்குப் பதில் கூறவேண்டியவர்களாக இருக்கின்றனர்.[14]

26. ஆயுதமேந்திய ஒரு அமைப்பு குறிப்பிடத்தக்களவு பிரதேசத்தின்மீதும் மக்களின்மீதும் கணிசமான கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் கொண்டிருப்பதோடு அடையாளப்படுத்துமளவிற்கு அரசியல் அமைப்பையும் கொண்டிருக்குமானால் அவ்வமைப்பிடம் மனித உரிமைகளைப் பேணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மதித்து நடக்கும்படி கோருவது பொருத்தமானதும் சாத்தியமானதுமே என்று நான் முன்னரும் குறிப்பிட்டுள்ளேன்.[15] இலங்கைக்கான இவ்விஜயம் ஆயுதக் குழுக்களிடம் மனிதஉரிமை சார் கடப்பாடுகளைக் கைக்கொள்ளும்படி வலியுறுத்தவேண்டியதன் அவசியம் மற்றும் அதனுடைய சிக்கலான தன்மை என்பவற்றை மேலும் தெளிவுபடுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இரண்டு பாத்திரங்களை வகிக்கிறார்கள். ஒருபுறம், அவர்கள் குறிப்பிடத்தக்களவு பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள், சிவில் நிர்வாகம் மற்றும் திட்டமிடல் என்பவற்றை நடத்துகிறார்கள், தமது சொந்த பொலிஸ் படையையும் நீதிமன்றத்தையும் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறத்தில், உலகநாடுகள் பலவற்றில் தடைகள், பிரயாணத் தடைகள், பொருளாதாரத் தடைகள் என்பன விதிக்கப்பட்ட ஆயுதமேந்திய ஒரு அமைப்பாகவும் இருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஏனைய ஆயுதமேந்திய அமைப்புகளையும் மனித உரிமைச் சாசனத்தின்படி நோக்க சர்வதேச சமூகம் தயங்குவதற்கு இவ்விரு பாத்திரங்களுக்கிடையேயான முரண்பாடே காரணமாகும். சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மனித உரிமைகளை பேணவேண்டுமென எதிர்ப்பார்க்கின்றபொழுதும் அவற்றை நேரடியாக அவர்களிடம் கோருவது அவர்களை 'ஒரு அரசு' போல் நடத்துவதாகவிருக்கும் என்பதனால் நெடுங்காலமாகத் தயங்குகிறது.

27. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு மக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொள்கின்றதே ஒழிய, அது யாரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்பது அவசியமல்ல. தனது உறுப்பு நாடுகள் அங்கீகரிக்காத பல்வேறுபட்ட குழுக்களிடம் மனித உரிமைகளை மதிப்பது சம்பந்தமான சர்வதேச கடப்பாட்டை அவர்கள் பேணுவார்கள் என்று பாதுகாப்புச் சபை கருதுகிறது.[16] தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய ஆயுதமேந்திய அமைப்புகளும் தாம் எம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக சர்வதேச சமூகத்திற்குக் கூறுகிறார்களோ அவர்களின் உரிமைகளைப் பேணுகிறார்களா என்பதை சர்வதேச சமூகத்தினர் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின்படியே நோக்குவார்கள் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

28. நாசகார செயற்பாடுளைக் கட்டுப்படுத்தும் சட்டவடிவமைப்பின் உள்ளடக்கத்திற்கு மனித உரிமைச் சட்டங்கள் இரு முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன. முதலாவதாக, மனித உரிமைகளை நசுக்குவதற்கு ஒருபோதும் நாசகார செயற்பாடுகள் பாவிக்கப்படாதிருத்தல் ஆகும். கருத்துக்களைத் தெரிவிக்கும் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், மற்றவர்களுடனுன் இணைந்து தொழிற்படும் சுதந்திரம், குடும்ப வாழ்வுக்கான சுதந்திரம், பொது விவகாரங்களில் பங்குபற்றும் சுதந்திரம், வாக்களிக்கும் சுதந்திரம் போன்றவற்றை வெளிப்படுத்தியதற்காக எவரும் படுகொலை செய்யப்படுவதென்பது மனித உரிமைகளை மீறும் செயலாகும். உரிமைகளை நசுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் கொலைகளின் சட்டவிரோதத்தன்மை ஒருபுறமிருக்க அது இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களின் ஊற்றுமூலமாகவும் இருக்கின்றது.

29. மனித உரிமைச் சட்டம் வழங்கிய இரண்டாவது அம்சம், ஆயுதப் போராட்டமொன்றில் மிகமிக அத்தியாவசியமான நிலமையில் அல்லாது வேறு சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே நாசகாரச் சக்தியைப் பிரயோகிப்பது தடுக்கப்பட்டுள்ளது என்பதாகும். வேறு வார்த்தையில் கூறினால் எவரையும் கொல்வது எப்போதும் கடைசி ஆயுதமாக இருக்கவேண்டும் - கடுமையான யுத்த நிலமையின்போதும் கூட.

30. ஆயுதப் பிணக்கொன்றில் மனித உரிமைச் சட்டத்திற்கு மேலாக மனிதாபிமானச் சட்டமும் தொழிற்படும். ஆகஸ்ட் 12, 1949 ஜெனீவா சாசனத்தில் 1959ம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஜெனீவா சாசனமும் மேலதிக விதிகளும் விதிக்கும் கடப்பாடுகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.[17] முரண்பாட்டில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரும் 1949ம் ஆண்டின் ஜெனீவா சாசனத்தின் 3ம் சரத்து குறிப்படும் பொதுவிதிகளின்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளனர் என்பதுடன் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தையும் மதிக்கும் கடப்பாடுடையவர்கள். கருணா குழுவும் முரண்பாட்டில் பங்குபற்றும் ஒரு தரப்பினர் என்றவகையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினைப் பின்பற்றும்

www.tamilarangam.net

கடப்பாடுடையவர்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 1.8ம் சரத்தின்பிரகாரம் அவர்கள் 'இராணுவ துணைப்படை' (paramilitary) என்ற அர்த்தத்தில் கருதப்பட்டாலும் அல்லது அரசாங்க உதவி பெறுபவர்களாகவிருப்பினும் அவர்களும் இப்பொதுக்கடப்பாட்டினை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களே. இருந்தபோதிலும் அரசாங்கம் அவர்களுக்கு உதவுமானால் அவ்வடிப்படையில், கருணா குழு மனிதாபிமானச் சட்டத்தை மீறுவார்களாயின் அதற்கான பொறுப்பை சட்டப்படி அரசாங்கமும் ஏற்கவேண்டியதாயிருக்கும்.

31. பொதுசரத்து 3 ஆயுதமேந்தாத எவரையும் கொல்வதைத் தடுக்கிறது. இச்சரத்து ஒருபுறத்தில் மேலெழுந்தவாரியான, தெளிவற்ற விதியாகவும் இன்னொருபுறத்தில் நாம் எண்ணுவதைவிட விளக்கமானதொரு விதியாகவும் இருக்கிறது. யுத்தம் நடக்கும்பொழுது நாசகார ஆயுதங்களின் பாவனையைப்பற்றி இச்சரத்து விளக்கமளிக்கவில்லை. ஆனால் இன்னொருபுறமாக இது போரிடுபவர்களையும் பொதுமக்களையும் படுகொலையிலிருந்து பாதுகாக்கிறது. எவ்வாறெனில் 'ஆயுதப் படையைச் சேர்ந்தவராயினும் காயமடைந்திருந்தால், கைது செய்யப்பட்டிருத்தால், சுகவீனமடைந்திருத்தால் அல்லது வேறு எக்காரணத்தினாலாவது ஆயுதங்களை கைவிட்டு தாக்குதலில் பங்குபற்றாதிருந்தால்' அவரைக் கொல்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் கொலைசெய்யப்பட்டால் அது இச்சரத்தை சந்தேகத்திற்கிடமின்றி மீறுவதாகிறது. கைது செய்யப்படும் எவரும் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவதற்கு உரிமையுடையவர்கள் என்ற அடிப்படை சட்டவிதியின்படி அவர்கள் பொதுமக்களாக இருந்தாலும் ஆயுதமேந்தியவர்களாக இருந்தாலும் அவர்கள் கொலைசெய்யப்படுவது பாரதூரமானதாகும்.

32. மோட்டார் சைக்கிளில் வந்து சுட்டுவிட்டுச் செல்வது பொதுவாகப் பாவிக்கப்படும் உபாயமாகவிருக்கிறது. ஒரு தரப்பினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற பிரதேசத்தில் இவ்வாறு ஒரு கொலை நடக்கும்போது இராணுவமோ, பொலிஸாரோ அல்லது ஆயுதமேந்திய அமைப்பின் உறுப்பினரோதான் இலக்காகவிருப்பார்கள்; பொதுமக்களாக இருக்காது என்று ஒருசிலர் கருதலாம்.[18] ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வாறு படுகொலை செய்யப்படுபவர் தனது நாளாந்தக் கடமைகளின் நிமித்தம் வெளியே சென்றுகொண்டிருப்பவராக இருப்பதுடன் ஆயுததாரியாக இருப்பதில்லை என்பதனால் இவையும் பொதுச்சரத்து 3 இன் மீறலாகவே கருதப்படவேண்டும். மனிதாபிமானச் சட்டத்தில் இப்படுகொலைகள் எவ்வாறு நோக்கப்படும் என்பது ஒருபுறமிருக்க சர்வதேச மனிதஉரிமைகள் சாசனத்தின்படி குற்றமாகவே கருதப்படும். 2005ம் ஆண்டின் கடைசிப்பகுதியில் அதிகமாக நிகழ்ந்த கிறினெட் தாக்குதல்களும் இங்கு கவனத்திற்குரியவை. சரத்து 3 இன் மீறலாக இவை பொதுவாகக் கருதப்பட்டபோதும் 'எழுந்தமானமான தாக்குதல்களை தடைசெய்யும்' சரத்தையும் அவை மீறுகின்றன.

33. இலங்கையில் உயிர்வாழ்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான பங்காற்றியிருக்கிறது. எனினும் இப்பங்களிப்பு மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படைத் தேவைகளைக் குறைத்து மதிப்பிடுவதாக அமைந்துவிடக்கூடாது. ஏனெனில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையுமே கட்டுப்படுத்துகிறது. ஆனால் மனிதஉரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் ஆயுதமேந்திய அனைத்து தரப்பினருக்கும் பொருந்தும். அது மாத்திரமின்றி யுத்தநிறுத்த ஒப்பந்தமானது இரு தரப்பினரதும் சர்வதேச சட்டரீதியான கடப்பாட்டை 'பொதுமக்கள்' என்ற அடிப்படையில் மாத்திரமே பார்க்கிறது. இதனால் 'ஆயுதமேந்தியவர்களின்' உரிமை மறைமுகமாக 'தாக்குதல்களில் ஈடுபடாமை' என்ற அடிப்படையிலேயே பாதுகாக்கப்படுகிறது.[19] ஆனால் சர்வதேச சட்டங்களின்படி, அனைத்து இலங்கையர்களும், அவர்கள் பொதுமக்களோ ஆயுதமேந்தியர்களோ எவராயினும், உயிர்வாழ்வதற்கு உரிமையுடையவர்கள். அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்தமும் கடமைகளும் ஒருபுறமிருக்க இவ்வடிப்படை உரிமையானது சகல தரப்பினராலும் மதிக்கப்படவேண்டும். மனித உரிமைகள் சட்டம், மனிதாபிமான சட்டம், யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்பன ஒன்றையொன்று மேவியும், ஒத்தும் ஒருங்கே மனித உயிர்களைப் பேணிப் பாதுகாக்கும் அமைவுகளேயாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இ. யுத்தநிறுத்தகாலத்தில் பொலிஸ் புலன் விசாரணைகளின் தோல்வி

34. அநேகமான அரசியல் படுகொலைகளை தீர விசாரிப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. பொலிஸ்படையின் பொதுவான திறமையின்மையும் வேறு தடைகளும் இதற்கான காரணங்களாகும். குறிப்பிட்ட படுகொலை ஏன் சரிவர விசாரணை செய்யப்படவில்லை என்று நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டபோதெல்லாம் ஒரே பதிலே கிடைத்தது: சந்தேகநபர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தப்பிச் சென்றுவிட்டார் என்பதே அது. அப்பிரதேசங்களுக்கு பொலிஸாரால் செல்லமுடியாது என்பது உண்மையேயாயினும்[20] இரண்டு விடயங்களை இங்கு அவதானிக்கலாம். முதலாவது, சந்தேகநபர் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு தப்பிச் சென்றுவிட்டார் என்பது ஒரு அனுமானமே. அங்கு எதுவித விசாரணையும் ஆரம்பிக்கப்படவேயில்லை. இரண்டாவது, அரசியற் படுகொலைகளை புலனாய்வு செய்வதில் பொலிஸாருக்கும் ஆர்வமற்றுப் போய்விட்டது. பெரும்பாலான பொலிஸ் அதிகாரிகள் புலிகள் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் அரசியற் படுகொலைகளை விசாரித்து குற்றவாளிகளை இனங்காண்பது நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்தத்தை குழப்பும் என்று கருதிக்கொண்டு இயங்குகிறார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறாதிருக்கும் அதேவேளை குற்றங்களைப் புலனாய்வு செய்து குற்றவாளிகள் யாராயிருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது பொலிஸாரின் கடமை என்பதை அரசாங்கம் சந்தேகத்திற்கிடமின்றி அறிவுறுத்தவேண்டும்.

35. கிரிமினல் குற்றங்களை விசாரிப்பதில் தொடர்ந்தும் இது பிரச்சினையாகவிருக்கிறது. அரச அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களை என்னிடம் தெரிவித்தார்கள். உதாரணமாக அரசாங்கப் பொலிஸார் 2005 செப்ரெம்பரில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னாருக்கு சென்றபோது அவர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் 2006 ஜனவரியிலும் புலிகளால் சிறைப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தனர். அதேநேரத்தில் சந்தேகநபர் தப்பிச்சென்றுவிட்டார். பின்பு அவர் கொழும்பில் பொலிஸாரிடம் சரணடைந்தார். சோபையில்லாத இன்னுமொரு நிகழ்ச்சியை வெலிக்கந்த பொலிஸார் என்னிடம் தெரிவித்தார்கள் - 5 கார்களைக் களவாடிய ஒருவர் பொலிஸ் விசாரணை நடந்துகொண்டிருந்தபோது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குத் தப்பிச்சென்றுவிட்டார். அதனுடன் விசாரணைகள் யாவும் முற்றுப்பெற்றன. 'தமிழீழ காவல்படையின்' பிரதிநிதியொருவர் இன்னுமொரு உதாரணத்தைத் தந்தார். இரண்டு வருடங்களுக்கு முன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மன்னாரில் ஒரு கொலை நிகழ்ந்தது. கொலைச் சந்தேகநபர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தப்பிச் சென்றனர். அங்கே அவர்கள் அரசாங்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டபோதும் போதிய சாட்சியங்கள் இன்மையால் ஒரு மாதத்தில் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். பாதிக்கப்பட்டவர்கள் பலர் இவ்வாறான வேறு பல சந்தர்ப்பங்களை என்னிடம் தெரிவித்தார்கள். காவற்துறையின் இவ்விரு சாராருக்குமிடையே புரிந்துணர்வின்மையால் சமூகக் குற்றங்களில் இருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்படுவது கேள்விக்குறியாகியுள்ளது.

36. குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் இருசாராருக்கும் பொது நோக்கமுண்டு. எனவே அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதற்காக அரச பொலிஸாருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் காவற்கடமையைச் செய்யும் காவற்படைக்கும் இடையில் தொடர்புகளை சீர்படுத்துவதற்கான முன்னெடுப்பை செய்யவேண்டும். அதன்மூலம் சாட்சியங்கள், தகவல்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்குமான சாத்தியப்பாட்டை ஏற்படுத்தவேண்டும். இவ்விடயத்தை நான் பொலிஸ் மாஅதிபருடனும் (Inspector General of Police – IGP), முன்னர் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்றியிருந்த தமிழீழ காவற்படையின் தலைவருடனும் கலந்துரையாடினேன். இருவரும் இதற்கான அவசியத்தை உணர்ந்தவர்களாயிருந்தபோதும் அரசியல்ரீதியில் சில தடைகளிருப்பதால் தயங்குகிறார்கள் என நான் உணர்ந்தேன். அத்துடன் தற்போதைய ஏற்பாடுகள் இந் நடவடிக்கைகளுக்கு போதுமானவையுமல்ல. துரிதமாக இவ்வேற்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்படுவது இரு தரப்பினருக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதற்கும் உதவுவதாகவிருக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும். பொருத்தமாயின் இலங்கை கண்காணிப்புக் குழு (SLMM) இவ் ஏற்பாட்டைச் செய்வதற்குரிய பேச்சுவார்த்தைக்கு துணையாயிருந்து அதனை வழிநடத்தலாம்.

37. தமிழ், முஸ்லிம் சமூகங்களில் நடைபெறும் கொலைகளைப் புலன்விசாரணை செய்வதற்கு சாட்சிகளைத் திறமையாக விசாரித்து தகவல்களைப் பெறுமளவிற்கு பொலிஸார் போதுமான மொழிவளத்தையோ அம்மக்களது கலாச்சாரத்தை விளங்கியவர்களாகவோ இல்லாதிருக்கின்றனர்.[21] அரசியற்படுகொலைகள் தமிழ்மொழி பேசும் இவ்விரு சமூகத்தையும் கணிசமானளவு பாதித்துள்ளது. ஆனால் பொலிஸ்படையிலோ 1.2% தமிழர்களும் 1.5% முஸ்லிம்களுமே உள்ளனர் என்பதுடன் மிகச்சில சிங்கள உத்தியோகத்தர்களே தமிழ்மொழியும் பேசுபவர்களாக உள்ளனர். சரளமாகத் தமிழ்மொழி பேசக்கூடிய பொலிஸ் அதிகாரிகளைப் பெறுவதற்குள்ள ஒரே வழி கணிசமானளவு தமிழ், முஸ்லிம் மக்களை பொலிஸ்படைக்குள் உள்வாங்குவதுதான்.[22] தமிழீழ விடுதலைப் புலிகள் அத்தமிழ் உத்தியோகத்தர்களைத் தாக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக அவ்வாறு தமிழ்மக்களை ஆட்சேர்ப்பது கடினம் என்று சிலசமயங்களில் வாதிடப்பட்டாலும் சம்பளம், ஊக்குவிப்பு மற்றும் பதவியேற்றத்திற்கான வாய்ப்பு என்பவற்றை அரசாங்கம் நியாயமானரீதியில் வழங்கி போதுமான முக்கியத்துவமளித்து முயற்சித்தால் அது சாத்தியமாகும் என்று விடயமறிந்த பல வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈ. இலங்கை கண்காணிப்புக் குழுவின் பிரச்சினைகளும் அதனுடைய பங்கும்

38. யுத்தநிறுத்த ஒப்பந்தம் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக இலங்கை கண்காணிப்புக் குழு (Sri Lanka Monitoring Mission – SLMM) அமைக்கப்பட்டது. அது இருதரப்பினரதும் நம்பிக்கையைப் பேணும், கடினமான, ஆனால் முக்கியமான பங்காற்றியுள்ளது. இருந்தபோதிலும் பொதுமக்கள் அவ்வாறு எண்ணவில்லை. பல சந்தர்ப்பங்களில் சிவில் சமூகத்தினர் பலர் குறைந்தபட்சம் மூன்று விடயங்களில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தொடர்பாக விரக்தியடைந்ததாகத் தெரிவித்தனர். 1) தமது செயற்பாடுகளைப் பற்றிய குறுகிய எண்ணக்கருவினால் விசாரணைகளைத் தவிர்ப்பது 2) சமாதான பேச்சுவார்த்தை அனுசரணையாளர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கும் அவர்கள் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினராகவும் தொழிற்படுவதிலுள்ள முரண்பாடு 3) யுத்தநிறுத்தமீறல்களைப் பகிரங்கப்படுத்தும்போது போதிய தகவல்கள் தராமை.

39. ‘கண்காணித்தல்’ (monitoring) என்பதற்கும் ‘விசாரணை’ (investigation) என்பதற்கும் இடையில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுதியான வித்தியாசத்தைக் கடைப்பிடிக்கிறது. இரு தரப்பினருக்கும் முறைப்பாட்டை அனுப்புகிறது, அவர்களிடமிருந்து பதிலைப் பெறுகிறது, பின்னர் யுத்தநிறுத்த மீறல் அங்கு நிகழ்ந்திருக்கிறதா என்பதைத் தீர்மானிக்க முயல்கிறது. இருந்தபோதிலும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ‘பொலிசாரைப்போல் புலனாய்வு செய்வது தங்களது வேலையல்ல’ என்று பகிரங்கமாக பலதடவை தெரிவித்துள்ளனர்.[23] திறமையான புலன்விசாரணையை மேற்கொள்ளுமாறு பொலிஸ்படையை தொடர்ந்தும் தாம் வற்புறுத்துவதாகவும் ஆனால் அவ்வாறு தீர விசாரிக்கப்படுவதில்லை என்பதை தாம் அறிந்திருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் என்னிடம் தெரிவித்தார்கள். இருந்தபோதிலும் யுத்தநிறுத்த ஒப்பந்தமானது இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) பரந்துபட்டவிதத்தில் விசாரணைகளைச் செய்வதைத் தடுக்கவில்லை. மாறாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ‘ஒப்பந்தத்தை அர்த்தப்படுத்துவதற்கு முடிவான அதிகாரமுடையவர்’[24] என்றே குறிப்பிடுகிறது. தமது வேலைத்திட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது தெளிவான, பொதுக் கண்காணிப்பிலும் அறிக்கையிடுவதிலும் ஈடுபடுவதற்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு போதுமான அதிகாரத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தம் வழங்கியிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

40. சமாதானப் பேச்சுவார்த்தையின் அனுசரனையாளராகிய நோர்வேயிடமிருந்து தாம் முற்றிலும் சுதந்திரமாகத் தொழிற்படுவதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) உறுதியாகத் தெரிவித்து வருகின்றனர். இது பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கும், சம்பந்தப்பட்ட தரப்பினரது அபிப்பிராயத்திற்கும் அல்லது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கும் அமைவாக இல்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி நோர்வே அரசாங்கமே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை நியமிக்கிறது. அதுமட்டுமின்றி இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நோர்வே அரசாங்கத்திற்கே அறிக்கையிடுகிறார்.[25] இவ்வேறுபாடு நோர்வேயிற்கு ஒன்றுக்கொன்று முரணான பாத்திரங்களை வழங்குகிறது. ஒருபுறத்தில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் (SLMM) இவர்களுக்குள்ள தொடர்பானது யுத்தநிறுத்த மீறல்களைக் கண்காணித்து, பாரபட்சமின்றி தீர்ப்புக்கூறவேண்டிய நிலையும், மறுபுறத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையின் அநுசரணையாளர் என்றவகையில் யுத்தநிறுத்தமீறல்கள் எவையும் பரந்தளவில் சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பாதிருக்கும்வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டிய தேவையும் நோர்வேக்கு உள்ளது. உரியவர்கள் தத்தமது செயல்களுக்கு தாமே பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் பொதுமக்களுக்கு இம்முரண்பாடு மிகவும் கவலைக்குரிய விடயம். பாரிய பங்களிப்பைச் செய்திருக்கும் நோர்வே நாட்டிற்கோ இம்முரண்பாடு தேவையற்றது.

41. யுத்தநிறுத்தமீறல்கள் பொதுமக்களையே பெரிதும் பாதிப்பதனால் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அதிகளவான முறைப்பாடுகள் தனிப்பட்ட நபர்களிடமிருந்தே வருவதொன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஆனால் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பொதுமக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பை ஏற்பதில்லை. முறைப்பாடுகள் தனிப்பட்டதும் இரகசியமானதுமாகப் பேணப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மாத்திரமே அனுப்பப்படுவதுடன் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு புள்ளிவிபரம் சார் தகவல்களையே பொதுமக்களுக்குத் தெரிவிக்கிறது. பெரும்பாலான யுத்தநிறுத்த மீறல்கள் மனிதஉரிமை மீறல்களாகவிருக்கின்றன. திறமையான கண்காணிப்பு ஏற்பாடானது பாதிக்கப்பட்டவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் பொறுப்பேற்பதாக (accountable) அமையவேண்டும். பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகளால் இதன் அவசியம் ஆழமாக உணரப்படுகிறது.

## உ) சர்வதேச கண்காணிப்பு - மாற்றுவழிகள் (options)

42. சிவில் சமூகத்தின் பல பிரதிநிதிகள் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பொன்றின் அவசியத்தையிட்டு எனக்கு அழுத்தங் கொடுத்தார்கள். இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவும் (SLMM) பொலிஸாரும் "பொறுப்பேற்கத்" தவறுவதன் காரணமாய் எழுந்த அதிருப்தியினால் அவர்கள் இக்கோரிக்கையை முன்வைக்கிறார்கள். சிலர் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) பலப்படுத்தப்பட வேண்டும் என்றுகூற வேறுசிலர் முற்றிலும் புதியதான இன்னொரு திட்டம் முன்வைக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

43. இரண்டாவது குழுவினர் முன்வைக்கும் வாதங்கள் வருமாறு:

a. யுத்தநிறுத்தக் கண்காணிப்பானது சமாதானப் பேச்சுவார்த்தையுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. இதனால் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும் (SLMM) அநுசரணையாளர்களுக்குமான தொடர்பைத் துண்டித்தாலும் அது இம்முரண்பாட்டைத் தீர்க்காது.

b. யுத்தநிறுத்த மீறல்களுக்கு பொறுப்பாயிருப்பவர்களைப் பகிரங்கப்படுத்தினாலும் அது தமிழீழ விடுதலைப் புலிகளையோ அவர்கள் அனுபவிக்கும் செல்வாக்கையோ பாதிக்காது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

c. யுத்தநிறுத்த மீறல்களுடன் தொடர்புடைய மனிதஉரிமை மீறல்கள் தொடர்ந்து நாடு முழுவதும் நிகழ்ந்தாலும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் (SLMM) வெளிக்கள உத்தியோகத்தர்கள் வடக்கு – கிழக்கில் மட்டுமே நிலைகொண்டுள்ளார்கள்.[26]

d. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) செயலூக்கமின்மையும் பொதுமக்களிடையே செல்வாக்கில்லாத நிலையும் முற்றிலும் புதியதான செயற்திட்டமொன்றைக் கோருகிறது.

e. கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் மனிதஉரிமை மீறல்கள் விசாரணை செய்யப்பட்டு அம்பலப்படுத்தப்படவேண்டும். ஆனால் அவர்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டவர்களல்ல.

44. புதிய மனிதஉரிமைக் கண்காணிப்பாளர்களாகத் தொழிற்படக்கூடியனவாக பல அமைப்புகள் இனங்காணப்படுகின்றன. அவற்றுள் ஐக்கிய நாடுகள் சபை (United Nations) பிரதானமாகவுள்ளது. மனிதஉரிமைகளைக் கண்காணிப்பதில் திறமையாக ஈடுபடக்கூடிய நிறுவனம் என்றவகையில் ஐ.நா.சபை பெற்றுள்ள பிரபல்யமும் சமாதானப் பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு அரசியல் தொடர்புகள் இல்லையென்பதினாலும் ஐக்கிய நாடுகள் சபை பெரிதும் விரும்பப்படுகிறது. அடுத்ததாக இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமைக் குழுவும் (Donor Co-Chairs) விரும்பப்படுகிறது. 'நோர்வே அல்லாத', 'உயர்மட்ட', 'மனித உரிமைவாதி'களை இன்னுஞ்சிலர் விரும்புகின்றனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு (Sri Lanka Human Rights Commission) அதிக வளங்களும் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டாலும்கூட அவர்கள் நாடுமுழுவதிலும் நடக்கும் அரசியற் படுகொலைகளை விசாரிப்பதற்கு பொருத்தமானதொரு அமைப்பாகவிருக்க மாட்டார்கள் என்று பொதுவாக அனைவரும் கருதுகின்றனர்.[27] கண்காணிப்பு நடவடிக்கைகளில் த.வி.புலிகள் பங்குபற்றுவதன்மூலமே அது திறம்பட நடப்பதை உறுதிப்படுத்தலாம் என்று என்னுடன் கலந்துரையாடியவர்கள் பலர் கருதினர்.

45. பலப்படுத்தப்பட்ட இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது (SLMM) பின்வரும் இலக்குகளை அடையமுடியும்.

a. ஆக்கபூர்வமான கண்காணிப்பைச் செய்வதற்கு விபரங்களை விசாரித்து அறிவதற்கான இயலுமை அவசியமாகிறது. இதற்கு பொலிஸ் பயிற்சியுடன் கூடிய நபர்கள், குறிப்பிடத்தக்களவு சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் உட்பட இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு (SLMM) ஊழியர்கள் தொகையை அதிகரிப்பது அவசியமாகிறது.

b. ஆக்கபூர்வமான விசாரணை என்பதில் சாட்சிகளுக்கு பாதுகாப்பளித்தலும் அடங்குகிறது.

c. தகவல்களை வெளியிடுதல் மிகவும் அவசியமானது. ஒட்டுமொத்தமான புள்ளி விபரங்களையும், எப்போதாவது பத்திரிகைச் செய்திகளையும் வெளியிடுவது போதுமானதல்ல. அத்துடன் இது தவறான தகவல்களும் வதந்திகளும் பரவுவதற்கு ஏதுவாகிறது. நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்களின் விபரங்கள், விசாரணையின் முடிவுகள், கண்காணிப்பு செயன்முறையின்மூலம் அடையாளங் காணப்பட்ட பொறுப்பாளிகளின் விபரங்கள் என்பன பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும் (தனிநபர்களின் பாதுகாப்புக் கருதி விபரங்கள் மறைக்கப்பட்டிருந்தாலும் கூட).

d. மேலும் பல மனித உரிமை வல்லுநர்கள், குறிப்பாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 2.1ஆம் சரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை மீளாய்வு செய்வதற்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் (SLMM) சேர்க்கப்படவேண்டும். இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சகல கள அலுவலகங்களில் மாத்திரமின்றி தலைமை அலுவலகத்திலும் இவ்வாறான ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவது நடைமுறையில் உத்வேகம் அளிப்பதாகவும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

46. போர் நிறுத்த ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இருக்கும் பொறுப்புக்களை மாற்றாமல் அவர்களது செயற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதன் மூலம் மேற்படி நோக்கங்களை அடையக்கூடியதாக இருக்கலாம். தாமும் இதையே விரும்புவதாக அரசாங்க அதிகாரிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் வலியுறுத்துகிறார்கள். உடனடியாக பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதற்கு இது பெருமளவில் பங்களிக்கும். ஆனால் சர்வதேச சமூகம் அதிகரித்த வளங்களை வழங்க வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் திறமையான, ஆக்கபூர்வமான கண்காணிப்பை வழங்குவதற்கு முழு ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும். அல்லாவிடில் இம்முயற்சி சாத்தியப்படாது.

47. மனித உரிமைகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுது இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் மனித உரிமைசார் பாத்திரத்தை வலுப்படுத்துவது மாத்திரம் இந்த இடைக்கால நிலமைக்குப் (medium – term) போதியதல்ல.[28] யதார்த்தத்தில் நிலமையை மேம்படுத்துவதற்கு தற்காலிகமாக நடைமுறைப்படுத்தக்கூடியது இதுவே எனினும், மேலும் விரிவான, தீவிரமான செயற்பாடுகள் விரைவில் தேவைப்படும். யுத்தநிறுத்த ஒப்பந்தம் தோல்வியுறுமானால் (இதற்கான சாத்தியங்கள் எப்போதையும்விட இப்போது அதிகமாக இருக்கிறது), இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாத்திரம் கேள்விக்குறியாகி விடும் என்பதுடன், முழு அளவிலான சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு முறையொன்று அமைக்கப்படுவது அவசரமானதும் அவசியமானதுமான தேவையாகும். அதேசமயம், ஒரு நீண்டகாலத் தீர்வு எட்டப்படுமாயின் மனித உரிமைகளின் சகல பரிமாணத்தையும் எட்டக்கூடிய விரிவானதும் விளக்கமானதுமான கண்காணிப்பு அவசியம்.

## ஊ) மீறல்கள் கறாராகக் கண்டிக்கப்படவேண்டும்

48. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனுடன் நான் கலந்துரையாடியபோது ஒரு தாக்குதலை 'நாம் செய்யவில்லை' என்று மறுப்பதற்கும் அதனைக் கண்டிப்பதற்கும் இடையிலான வித்தியாசத்தை வலியுறுத்தினேன். யுத்தநிறுத்த மீறல்கள் நிகழும்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் அவற்றை சந்தேகத்திற்கிடமின்றி வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று கோரினேன். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்மக்களின் அமைப்பென்பதால் தமக்குச் சார்பான தமிழ்மக்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை தம்மால் கண்டிக்கமுடியாது என்று அவர் பதிலுக்கு வாதாடினார். தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்கின்ற 'தலைமைத்துவத்திற்கும்' (leadership) இவ்வாதத்திற்கும் இடையில் சிறிதேனும் தொடர்பில்லாதிருக்கிறது. பரந்தளவில் நிகழ்கின்ற உயிர்வாழ்வதற்கான உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவருவதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உண்மையில் ஆர்வமிருந்தால் அப்படுகொலைகளை ஐயத்திற்கிடமின்றி கண்டிக்க வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அத்தியாவசியமான அம்சங்களை யுத்தநிறுத்த ஒப்பந்தம் உள்ளடக்கியிருக்கிறது என்று நம்பும்பட்சத்தில், பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதற்கு இது அவசியமாகும்.

49. கருணா குழு தொடர்பாக அரசாங்கத்தின் இரட்டைத்தன்மையும் கவனத்திற்குரியது. அடிப்படை மனித உரிமைகளை சட்டபூர்வமாக பேணவேண்டிய பொறுப்புள்ள அரசாங்கம், படுகொலைகள் அடிப்படை மனித உரிமையை மீறும் செயல்கள் என்பதை கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதில் தனது பங்களிப்பாக அரசாங்கம்

www.tamilarangam.net

தமக்கும் கருணா குழுவுக்கும் இடையிலுள்ள தொடர்பை கைவிடுவதுடன் அதனைப் பகிரங்கமாக அறிவிக்கவும் வேண்டும். அது மாத்திரமின்றி, கருணா குழுவினால் மேற்கொள்ளப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கொலைகளைக் கண்டிக்கவும் அக்கொலைகளை விசாரித்து குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும் தனது உறுதியைக் காட்டவேண்டும்.[29]

## III. தடுப்புக் காவல் மரணங்களும் தண்டனைகளிலிருந்து தப்பும் உரிமையும் (Deaths in custody and Impunity)

### அ) அறிமுகம்

50. கணிசமானளவு பொலிஸ் கொடூரத்தனமும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தண்டனையிலிருந்து தப்பும் உரிமையும் பற்றிய தகவல்கள் பரந்தளவில் பல வட்டாரங்களிலிருந்து எனக்கு கிடைத்தது. இதற்கு அடித்தளமாகவுள்ள காரணத்தை பகுத்தறிவது கடினமானதல்ல. ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக நிகழும் உள்நாட்டுக் கலவரத்தினாலும் வன்முறைகளாலும் பொலிஸ் துறையானது ஒரு எதிர்கிளர்ச்சி படையாக (counter-insurgency force) திரிபடைந்துள்ளது. இன்றைய பொலிஸ்படையில் மூன்றில் இரண்டு பங்கினர் பொலிஸ் துணைப்படையினராவர் (reserve police). இவர்களில் பெரும்பான்மையானவர்கள் சட்டவிரோதச் செயல்களை கண்டுபிடிப்பதற்கோ புலன்விசாரணை செய்வதற்கோ உரிய பயிற்சியை ஒருபோதும் பெற்றவர்களில்லை.[30] 'இன்று பதவியில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆள் எண்ணிக்கைக்காக பொலிஸ்படையில் சேர்க்கப்பட்டவர்களேயல்லாமல் அவர்களுக்கு காவற்துறை வேலையைச் செய்வது எவ்வாறு என்றும் தெரியாது, அவர்கள் அதைச் செய்வதுமில்லை' என்று ஒரு அரசாங்க அதிகாரி என்னிடம் பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார்.[31] நாட்டில் நிலவிய ஆயுத மோதலின்போது கைதிகளை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யாமல் காலவரையறையின்றி தடுப்புக்காவலில் வைத்திருக்கவும், ஆட்கொணர்வு மனுவின்றி சாதாரண சட்டத்தின் கீழ் வழமையாக அனுமதிக்கப்படாத 'குற்ற ஒப்புதல் வாக்குமூலம்' பெறுவதற்கும், இராணுவத்தால் அல்லது பொலிஸாரினால் மரணமடைபவரின் உடல்களைப் பிரேத பரிசோதனையின்றித் தகனம் செய்துவிடக்கூடிய அனுமதியையும் வழங்கும் அவசரகாலச் சட்டத்தின்கீழ் (emergency lesgislation) காவற்துறை கொண்டுவரப்பட்டமையானது நிலைமையை இன்னும் பாரதூரமாக்கியது. வெளிநாட்டு அமைச்சராவிருந்த திரு. லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் கொல்லப்பட்டதன் பின்னர் அவசரகாலச் சட்டத்தின் பெரும்பகுதி மீண்டும் அமுல் செய்யப்பட்டிருக்கின்றமை வருந்தத்தக்க விடயமாகும்.[32] இன்று மிக அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசாரணை செய்வதற்கும் பலவந்தமாக வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் வன்முறையைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அர்த்தபுஷ்டியான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளாகாமலோ நீதிசார் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டியவர்களாக இல்லாமலோ தப்பித்தும் கொள்கிறார்கள்.

51. பெப்ரவரி 2002 யுத்தநிறுத்தம் பதற்றநிலையைத் தணித்தமையால் பொலிஸ்படையை சீரமைப்பதற்கேற்ற நல்ல தருணமாக அது அமைந்தது; குறிப்பிடத்தக்களவு மாற்றங்களும் செய்யப்பட்டன. 2002இல் யாப்பில் திருத்தங்கள் செய்யப்பட்டு பொலிஸாரை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தும் அதிகாரமுடையதாகவும், பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்று விசாரிக்கக்கூடியதாகவும் ஒரு சுதந்திரமான தேசிய பொலிஸ் ஆணைக்குழு (National Police Commission – NPC) உருவாக்கப்பட்டது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் (Human Rights Commission – HRC) இணைந்து நம்பிக்கையளிக்கக்கூடிய நன்முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்துள்ளன. இருந்தபோதிலும் போதிய அரசியல் பக்கபலமும் வளங்களும் வழங்கப்படாவிட்டால் இவர்களது செயற்பாடுகள் படிப்படியாக முடக்கப்பட்டுவிடும். அடுத்த பாரிய சிக்கல் யாதெனில் இலங்கை கிரிமினல் நீதித்துறையின் திறனின்மை ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொலிஸ் கலாச்சாரம், அவர்களது செயற்படுபாணி ஆகியவற்றை சீர்செய்வது, வழக்குதொடுநர்கள் (prosecutors), நீதித்துறை என்பவற்றை விருத்தி செய்வது என்பனவே முன்னேற்றத்திற்கு அவசியமானது. இது கடினமான பணி, ஆனால் இயலாத பணி அல்ல. இவ்வமைப்புகள் திறமையும் நல்லெண்ணமும் ஊக்கமும் உடைய அதிகாரிகள் சிலா் அல்ல – பலரைக் கொண்டுள்ளன.

52. இலங்கையில் ஒரேயொரு பெரிய திருத்தத்தை மாத்திரம் செய்து நீதித்துறை முழுவதையும் சீா்படுத்த முடியாது. மாறாக பல சிறிய சிக்கல்கள் தீா்க்கப்படவேண்டியனவாக உள்ளன. படிப்படியான மாற்றங்களைச் செய்வது அதனுடைய தேவை அடையாளங்காணப்பட்ட பின்னரே முழுமையாக சாத்தியமாகும். இன்று அநேக இலங்கையா்கள் - அரசாங்கத்திற்கு உள்ளும் வெளியிலும் - கிரிமினல் நீதித்துறையில் திருப்தியடைந்தவா்களாக இருக்கிறார்கள். நல்மாற்றங்கள் கொண்டுவரப்படுவதற்கு, சங்கடமான சில உண்மைகளை உணா்வது முதலாவதும் முக்கியமானதுமான அம்சம். ஒரு சிறு தொகையினா் மாத்திரம் மாற்றத்தை விரும்புவது நடைமுறையில் எந்த மாற்றத்தையும் கொண்டுவராது. தமிழா்கள் கொல்லப்பட்டமைக்காக ஒருசில அரசாங்க உத்தியோகத்தா்கள் மாத்திரம் குற்றங் காணப்பட்டு தண்டிக்கப்பட்டமையானது உண்மையில் ஒரு கேலிக்குரிய விடயமாகவே இருந்தது. சித்திரவதையின்மூலம் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பிழிந்தெடுப்பது கிரிமினல் குற்றப் புலனாய்வு விசாரணைக்கு எதுவிதத்திலும் தொடா்பில்லாத விடயம். திறமையற்ற நீதித்துறையானது பொலிஸ் சித்திரவதை, கைதிகள் கொல்லப்படுதல் போன்றவற்றைப் பார்த்தும் பாராமலும் வாளாவிருப்பதற்கு ஏற்ற மனோநிலையை மக்களிடையே ஏற்படுத்துகிறது. இந்நிலமை உணரப்பட்டால், தற்போதுள்ள நிலையைப்பற்றிய சுயதிருப்தி மனோபாவம் மாறி நல்மாற்றத்திற்கான அத்தியாவசியம் உணரப்பட்டால் திறமையான, ஜனநாயகபூா்வமான காவற்துறையையும் கிரிமினல் நீதித்துறையையும் மிக விரைவாக அமைப்பதற்கு இலங்கையா்களால் முடியாததில்லை.[33]

### ஆ) பொலிஸ் காவலிலிருக்கும்போது ஏற்படும் மரணங்கள்
### (Deaths in police custody)

53. தற்போது பொலிஸாா் விசாரணையின்றி கைதிகளைக் கொன்றுவிடுகின்றனா். இது மிகப் பாரதூரமான போக்காகும். அரசாங்கத்தினால் மறுக்கப்படாத அறிக்கைகளின்படி, நவம்பா் 2004 முதல் ஒக்டோபா் 2005 வரையான காலத்தில் 22 கிரிமினல் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டபின் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனா். கைது செய்யப்பட்டு, உடல் சோதனை செய்த பின், கைவிலங்கு மாட்டப்பட்ட நிலையில் (பெரும்பாலும்) கைதிகள் தப்பியோட முயற்சித்தார்கள் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கினார்கள் என்பதனால் பொலிஸாா் தாக்கும் நிா்ப்பந்தம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. சுடப்பட்ட சகல சந்தா்ப்பங்களிலும் கைதிகள் கொல்லப்பட்டார்கள். ஆனால் பொலிஸாா் எவருக்கும் காயமேற்படவில்லை. இந்நிகழ்வுகள் எவற்றிலும் பொலிஸ் உள்விசாரணை (internal police investigation) ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்தியது. அதற்கு கூறப்படும் காரணம் 'முறைப்பாடு கிடைக்கவில்லை' என்பதாகும்.[34] இவ்வாறு கைதிகள் கொல்லப்படுவதானது அதற்கு பொறுப்பானவா்களை நீதிக்கு முன் நிறுத்துவதிலும் எதிா்காலத்தில் இவ்வதிகாரத் துஷ்பிரயோகம் நிகழ்வது தவிா்க்கப்படுவதற்கும் உரிய உத்தியோகபூா்வமான செயற்பாட்டைக் கோருகிறது.

54. பொலிஸ் தடுப்புக் காவலிலிருக்கும்போது நிகழும் மரணங்களுக்கு அடுத்த பெரும் காரணமாக அமைவது சித்திரவதையாகும்.[35] (பரந்தளவில் நிகழும் சித்திரவதைகளின் தவிா்க்கமுடியாத பக்கவிளைவு மரணம்.)[36] பரவலாக சித்திரவதை மேற்கொள்ளப்படுவதை பொதுவாக அரசாங்க அதிகாரிகள் வெளிப்படையாக ஒத்துக்கொள்கிறார்கள். சித்திரவதையின் தன்மை மிகைப்படுத்தப்படுவதாகச் சில அதிகாரிகள் குறைகூறுகின்றபோதும் இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொலிஸ்நிலையங்களில் கைது செய்யப்படும் சந்தேகநபர்களிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற உடல்ரீதியான வதை சகஜமாக மேற்கொள்ளப்படுதையும் இதனால் சிலசமயம் கைதிகள் மரணமடைவதையும் ஒப்புக்கொள்கிறார்கள். எப்படியானபோதிலும் இதனை அவர்கள் இவ்வளவு சாதாரணமாகவும் சகஜமாகவும் சுய-திருப்தியான மனோபாவத்துடனும் ஏற்றுக்கொள்வது உண்மையில் மிகப் பாரதூரமான பிரச்சினையாகும். ஒரு உயரதிகாரி என்னிடம் பேசும்பொழுது சித்திரவதை மிகப் பரவலாக மேற்கொள்ளப்படுகிறதுடன் அது பிரச்சினைக்குரியது என்றும் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் தொடர்ந்து பேசும்போது கடமையைச் செய்யும்பொழுது ஏன் பொலிஸார் சித்திரவதை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்பதைத் தான் புரிந்துகொள்வதாகவும் தனிப்பட்ட கோபதாபங்களுக்காக பொலிஸார் சித்திரவதை செய்வார்களாயின் அதை மன்னிக்கமுடியாது என்றும் கூறினார். சித்திரவதையை ஒரு சாதாரணமான விஷயமாக ஏற்றுக்கொள்வது மிகவும் பாரதூரமான பிரச்சினையாகும். இலங்கையில் காவலில் இருக்கும் கைதிகள் மரணமடைவது நாடாளாவியரீதியில் நிகழுகிறது. இதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு சட்டபூர்வமான கடப்பாடுள்ளது. காவலிலிருக்கும்போது ஏற்படும் மரணங்கள் ஒரு சில போக்கிரிப் பொலிசாரினால் மேற்கொள்ளப்படுபவை அல்ல. மாறாக ஸ்தாபனமயமாக்கப்பட்ட நடவடிக்கையாக சாதாரண பொலிசாரால் மேற்கொள்ளப்படுகிறது. தடுப்புக் காவலில் இருக்கும் கைதிகள் கொல்லப்படுவது தடுக்கப்படவேண்டும் என்பதை அரசாங்க அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு உரிய வழிவகைகளைக் கைக்கொள்வதானது அடிப்படை மனித உரிமைகளை மதிப்பது மாத்திரமின்றி தம்மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பேணுவதற்கான அடிப்படையுமாகும்.

55. தடுப்புக் காவலில் இருக்கும்போது நிகழும் மரணங்களைத் தடுப்பதற்குரிய சீர்திருத்தங்கள் செய்யப்படும்பொழுது அவை இம்மரணங்கள் நிகழ்வதற்கான அடிப்படைக் காரணிகளை கவனத்திற்கு எடுக்கவேண்டும். அக்காரணிகள், குறிப்பாக, அநேக உத்தியோகத்தர்களுக்கு முறையான பொலிஸ்பயிற்சி போதியளவு வழங்கப்படாமை, பலவந்தமாகப் பெறப்படும் வாக்குமூலங்களுக்கு அளிக்கப்படும் நம்பகத்தன்மை, புலன் விசாரணை செய்வதிலுள்ள பலவீனமும் அதன் காரணமாக 'திடீர்த் தீர்ப்பு' வழங்குவதில் பொலிஸாருக்கு இருக்கும் ஆவலும், பாரதூரமான மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்படும் பொலிஸார் தண்டிக்கப்படுவதோ அல்லது குறைந்தபட்சம் ஒழுக்காற்று நடவடிக்கைக்குள்ளாவதோ இல்லை என்பனவாகும்.[37]

56. முறையான விசாரணை செய்வதிலுள்ள குறையானது போதிய பொலிஸ் பயிற்சியின்மையும் வளங்கள் போதாமையும், தடயங்களைப் பகுப்பாய்வு செய்வதிலுள்ள திறமையின்மையும், சாட்சி கூறுபவர்களைப் பாதுகாப்பதில் கவனஞ் செலுத்தாமையும் ஆகியவற்றினால் ஏற்படுகிறது. பெரும்பாலான பிரேத பரிசோதனைகளைச் செய்யும் பிரேத பரிசோதனை அதிகாரிகளுக்கு (Judicial Medical Officers – JMO) அவசியமான வாகனங்கள், உபகரணங்கள் இல்லை; உரிய விசேட பயிற்சியும் வழங்கப்படுவதுமில்லை. உடனடியான, திறமையான பரிசோதனை செய்வதற்கு பல தடைகள் இருப்பதென்பது உண்மையில், பல முக்கிய தடயங்களும் சாட்சியங்களும் வீணே தவறவிடப்படுகின்றன என்பதேயாகும். சாட்சியங்களைப் பாதுகாக்கத் தவறுவதும் திறமையான புலன் விசாரணையைப் பாதிக்கின்றது. இதனால் சாட்சிகள், குறிப்பாக பொலிஸாரால் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பாக, சாட்சி கூறுவதற்கு தயங்குகிறார்கள். சாட்சியாய் (witnesses) இருப்பதைவிட பாதிக்கப்பட்டவராய் (victim) இருப்பது நல்லது என்று என்னுடன் கலந்துரையாடிய பலர் கேலியாகக் கூறினர். திறனற்ற புலனாய்வின் பலனாக சாட்சியங்களால் குற்றத்தை உறுதிப்படுத்தமுடியாது போகிறது. பலதரப்பட்ட பொலிஸ் மற்றும் தடயவியல் பயிற்சிகள் அபிவிருத்தி உதவித் திட்டங்களினால் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், விரிவான மீளாய்வு இல்லாத இப்பொழுதில் எனது அபிப்பிராயப்படி, இவை பிரயோசனமாகவிருக்கின்ற போதிலும் வருந்தத்தக்க விதத்தில் போதுமானவையாக இல்லாமலிருக்கின்றன.

57. தடுப்புக் காவலில் இருந்த கைதியொருவர் மரணமடைவதற்கு பொறுப்பாக இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீது விசாரணை நடத்தப்படாமைக்கு உள் விசாரணை (Internal investigation) நடத்துவதிலுள்ள அசமந்தப்போக்கே காரணமாகும்.

www.tamilarangam.net

பொலிஸாரின் அதிகாரத் துர்நடத்தை அல்லது துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகள் பொலிஸ் அத்தியட்சகரினால் (Inspector General) ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர் அம்முறைப்பாடுகளை விசேட புலனாய்வுப் பிரிவிடமோ (Special Investigations Unit – SIU) அல்லது கிரிமினல் புலனாய்வுப் பிரிவிடமோ (Criminal Investigation Unit - CID) உள்விசாரணைக்காகக் கையளிக்கிறார். பாரதூரமான சம்பவமொன்றைப் பற்றிய உள்விசாரணை முடிவடைய சாதாரணமாக இரண்டு தொடக்கம் நான்கு வருடங்கள் ஆகின்றன. ஆகையால் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் யாவும் விசாரிக்கப்படுவதென்பது நடைபெறாத காரியமாகவே தென்படுகிறது. மிகப் பாரதூரமான துஷ்பிரயோகங்களான சித்திரவதை அல்லது கொலை பற்றிய விசாரணைகள் பொதுவாக கிரிமினல் புலனாய்வுப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. கிரிமினல் புலனாய்வுப் பிரிவின் (CID) பிரதான கடமை உள்ளூர் பொலிஸார் தமது கடமையைச் செய்வதற்கு உதவுவதாகும். அவர்களே உள்விசாரணைகளையும் மேற்கொள்வதானது அது திறன்படச் செய்யப்படுவதற்கு குந்தகமாக அமைவதுடன் விசாரணைகள் பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படும் என்ற எண்ணத்தையும் வெளியாருக்கு தரவில்லை. சீர்திருத்தம் மிக அத்தியாவசியம். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் (National Police Commission) இச்சீர்திருத்தமானது மேலும் தூண்டப்பட்டு, வலுப்படுத்தப்படும் என்று நம்பப்படுகிறது.[38]

58. சேகரிக்கப்பட்ட சாட்சியங்கள் போதாமை, நீதித்துறை வழக்குகளைத் தாமதமாகக் கையாளுதல் போன்ற காரணங்களினால், சட்ட மாஅதிபரிடம் (Attoney-general) கையளிக்கப்படும் வழக்குகளுக்கு தண்டனை அளிக்கப்படுவது அரிதாகவே நிகழ்கிறது. சிலவேளைகளில் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வருடக்கணக்கான தாமதம் ஏற்படுவது சகிக்கப்படுவதும் ஒரு காரணமாகும். நீதித்துறையின் வேலைப்பழு மிகவும் அதிகமாக இருப்பதால் யாதேனுமொரு காரணத்தைச் சாட்டாகக் கொண்டு நீதிபதிகள் வழக்குகளை இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்கவோ அல்லது வழக்கைத் தள்ளிவிடவோ முனைவதாக ஓர் அரசாங்க அதிகாரி கூறினார். வழக்குத் தாக்கல் செய்யப்படும்பொழுது, சட்டத்தின்படி, அவர்கள் வேலை இடைநிறுத்தமும் (Interdiction) செய்யப்படுவார்களாயின் பொலிஸ் அதிகாரிகளும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களும் வழக்குகள் இவ்வளவு மெதுவாக நடப்பதை விரும்பமாட்டார்கள் என்பதை அவர் சுட்டிக் காட்டினார். நீதிபதிகளைச் சந்திப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்காததையிட்டு வருந்துகிறேன். ஆனால் நீதிமன்றங்கள் வழக்குகளைத் திறமையாக கையாளுவதில்லையென்ற பரவலான அபிப்பிராயத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. இந்த அவப்பெயருக்கான பொறுப்பின் ஒரு பகுதி வழக்கறிஞர்களையும் சாரும். சட்ட மாஅதிபர் பொலிஸ் சித்திரவதை வழக்குகளை கையாள்வதில் அதிக உற்சாகத்துடன் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. இதுவரை 64 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், இரு வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகவும், 2 அல்லது 3 வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகளென்று தீர்ப்பளிக்கப்பட்டதாகவும் எனக்கு தெரிவித்தார். இது பொறுப்பை ஏற்பதற்கான (accountability) ஆரம்பமா அல்லது நாடகத்தின் தொடர்ச்சியா என்பதைக் காலம் சொல்லும்.[39]

### இ) தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் நிலைமையால் ஏற்படும் விளைவுகள்

59. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தட்டிக்கேட்கப்படுவதோ தண்டிக்கப்படுவதோ இல்லை என்பது இலங்கையில் மிக ஆழமாக உணரப்படும் பிரச்சினையாகும். தமிழரைக் கொன்றதற்காக ஒரு அரசாங்க உத்தியோகத்தர்மீது - இராணுவம் அல்லது பொலிஸ் - வழக்குத் தாக்கல் செய்யப்படுவது மிக அரிதாகவிருப்பதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். நான் கலந்துரையாடிய பலராலும் ஆறு இராணுவத்தினரும் பொலிஸாரும் தண்டிக்கப்பட்ட கிரிஷாந்தி வழக்கைத் தவிர வேறு ஒரு சம்பவத்தைத் தானும் கூற முடியவில்லை.[40] விசாரணையோ தண்டனையோ வழங்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவற்றவை. ஆனால் அதன் விளைவு தெளிவாகத் தெரிகிறது: தமது உயிர்கள் சட்டத்தினால் பாதுகாக்கப்படுமா என்று பெரும்பாலான பொதுமக்கள் சந்தேகப்படுகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

60. பிந்துனுவெவ படுகொலைகளில் சம்பந்தப்பட்ட எவரையும் தண்டிப்பதில் அரசு அடைந்த தோல்வியானது குற்றம் செய்தவர்கள் தண்டணையிலிருந்து தப்பிக்கொள்ளும் நிலைமைக்கு ஒரு உதாரணமாகும். ஒக்டோபர் 25, 2000ம் ஆண்டில் 27 தமிழ் இளைஞர்கள், கிட்டத்தட்ட 60 பொலிஸ் உத்தியோகத்தர்களின் 'பாதுகாப்பில்' தடுப்புக் காவலில் இருந்தபோது ஒரு கூட்டத்தினால் அடித்து, வெட்டி, மிதித்துக் கொல்லப்பட்டார்கள். ஆனால் அதில் சம்பந்தப்பட்ட ஒரு தனிநபரோ, அரச உத்தியோகத்தரோ தானும் தண்டிக்கப்படவில்லை. இவ்வழக்கு தொடர்பாக நான் முன்னர் இலங்கை அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தேன்.[41] இவ்விஜயத்தின்போது பிந்துனுவெவவில் கொல்லப்பட்டவர்களின் தாய்மார்களையும் அச்சம்பவத்தில் உயிர்தப்பிய ஒருவரையும் அக்குடும்பங்களின் வழக்கறிஞர் ஒருவரையும் சந்தித்தேன்.

61. அரசும் தனிநபர்களும் சம்பந்தப்பட்ட கிரிமினல் குற்றமே இச்சம்பவம் என்பது மறுக்க முடியாத, ஒன்றுக்கு மேற்பட்ட அரசாங்க அறிக்கைகளினால் உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகும்.[42] இருந்தபோதிலும் பிந்துனுவெவ சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர்தானும் தண்டனை பெறவில்லை.[43] நீதித்துறையின் இத்தோல்வியைப் பற்றி பல விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன; பொலிஸார் போதுமான புலன்விசாரணை நடத்தாமையால் குற்றத்தை நிருபிக்கக்கூடிய சாட்சியங்கள் போதாமை, நீதித்துறையின் பக்கஞ்சார்பு அல்லது ஊழல், வழக்கின் சிக்கலான தன்மையின் காரணமாக நீதிபதிகள் எழுந்தமானமான நியாயங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்க வேண்டியவர்களாக இருந்தமை என்பன அவற்றுட் சில. இங்கே ஒரு முடிவான தீர்ப்பைக் கூறுவதற்குப் போதுமான தகவல்கள் என்னிடம் இல்லை. ஆனால் இது மிகவும் திருப்தியற்ற தீர்ப்பு என்பதுடன் தமிழர்களைக் கொல்பவர்கள் தண்டனையின்றி தப்பித்துக் கொள்ளலாம் என்ற அச்சம் உறுதிப்படுத்தப்படுவதே இதன் விளைவாகும்.[44]

### ஈ) சுதந்திரமான மேற்பார்வை அமைப்புக்கள்

62. நீதித்துறையில் சட்டத்தை அமுல்படுத்துவதில் காணப்படும் குறைபாடுகள் அந்தந்த நிறுவனங்களின் மறுசீரமைப்பை வேண்டிநிற்கின்றன. சுதந்திரமான அமைப்புக்கள் இந்த மறுசீரமைப்பு செயன்முறையில் முக்கிய பாத்திரத்தை வகிக்கமுடியும். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் (National Police Commission) மனித உரிமைகள் ஆணைக்குழுவும் (Human Rights Commission) பெறுமதியான பங்களிப்பைச் செய்துள்ள அதேவேளை அவை வளப்பற்றாக்குறையையும், மிக முக்கியமாக, அரசியல் பக்கபலமின்மையையும் எதிர்நோக்குகின்றன.

63. மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) பொலிஸாரின் நடத்தை பற்றிய சுதந்திரமான மேற்பார்வையாளராக 1997 ஆண்டுமுதல் செயற்படுகின்றது.[45] யாப்பிலும் சர்வதேசச் சட்டங்களிலும் வரையறுக்கப்பட்டுள்ள, உயிர் வாழ்வதற்கான உரிமை உள்ளடங்கலாக, அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும்பொழுது விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வேலைத்திட்டமாகும். இவ்வமைப்பினால் முறைப்பாடுகளை கையேற்க முடியும். விசாரணைகளை மேற்கொள்வதற்கும் சட்டபூர்வமான அதிகாரம் உண்டு. உதாரணமாக, பொலிஸ் நிலையங்கள், தடுப்புக்காவல் நிலையங்கள் போன்றவற்றுக்கு முன்னறிவித்தல் கொடுக்காமல் திடீர் விஜயங்கள் மேற்கொள்ளலாம். பல சித்திரவதை வழக்குகளில் கவனஞ் செலுத்திய இவ்வமைப்பு தற்போது கிரிமினல் கைதிகளை பொலிஸார் சுட்டுக் கொன்ற சம்பவமொன்றை விசாரிக்கின்றது. இவ்வாணைக்குழுவினால் மனித உரிமை மீறல்களைத் தடுக்கவோ, நீதி வழங்கவோ அதிகாரமில்லாதபோதும் வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும், தண்டனை பெற்றுத் தரவும் போதிய அதிகாரம் உள்ளது. தற்போது நிலவும் சூழலில் முக்கிய பாத்திரத்தை வகிக்கும் ஆற்றல் இவர்களுக்கு உள்ளபோதும் வளப் பற்றாக்குறை நிலவுவது துரதிருஷ்டமானது. இதனால் பிரதான முறைப்பாடுகள் யாவற்றிலும் கவனஞ் செலுத்துவது கடினமாகும். உதாரணமாக தடுப்புக்காவலில் நடைபெறும் துஷ்பிரயோகங்களைப் பற்றி கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு அங்கு செல்ல வாகனப் பற்றாக்குறை நிலவுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

64. தேசிய பொலிஸ் ஆணைக்குழு (NPC) 2001ம் ஆண்டு அரசியல் யாப்பின் ஏழாவது யாப்புச் சீர்திருத்தத்தின்மூலம் உருவாக்கப்பட்டது. சுதந்திரமான விசாரணைகளை[46] மேற்கொள்வது என்பது இவ்வமைப்பிற்கு அளிக்கப்பட்ட ஆணைகளில் ஒன்று. ஆனபோதிலும் இதன் தனித்துவமான செயல்பாடு நீண்டகால நோக்கில் சிறப்பாகத் தொழிற்படுவதற்கு அரசியல்ரீதியான போதுவான ஆதரவில்லை. என்னுடன் கலந்துரையாடிய பலா் கூறியதுபோல பொலிஸ் துறையில் உத்தியோக நியமனம், பதவி உயா்வு, இடமாற்றம் போன்றவற்றில் அரசியல்வாதிகள் செல்வாக்குச் செலுத்துவது இலங்கையின் நீண்டகால சரித்திரமாக இருந்தது ஆச்சரியத்துக்குரியது. இருந்தபோதிலும் பொலிஸ் துறையினுள்ளேயே சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஒரு அமைப்பிடம் நிா்வாக அதிகாரத்தை கையளிப்பது அரசியல் செல்வாக்கிலிருந்து விடுபடவும் தொழிற்திறமையோடு செயற்படவும் உதவுமென்ற நம்பிக்கை நிலவுகிறது. நான் பேசிய பல சிவில் சமூகத்தினரும் அரசாங்க அதிகாரிகளும் இதுவரை தேசிய பொலிஸ் ஆணைக்குழு செய்த சேவைகளைப் பாராட்டிப் பேசினாா்கள். அதேசமயம் பொலிஸ்துறையையும் அரசியலையும் பிரிக்கின்ற முயற்சியில் பொலிஸ்துறை அரசியலுக்குப் பலியாகி விடுமோ என்று அவா்களிட் சிலா் பயந்தாா்கள்.[47]

65. கொள்கைக்கும் யதாா்த்தத்திற்கும் உள்ள இடைவெளியை 2005ம் ஆண்டு காலப்பகுதியில் நடந்த இழுபறி வெளிக்காட்டியது. மாா்ச் மாதத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு (NPC) ஆனது பொலிஸ் அத்தியட்சகரிடம் (Inspector General of Police – IGP) சித்திரவதை செய்த அடிப்படையில், உரிய நிா்வாக விதியின்படி (Establishment Code) வேலை இடைநிறுத்தம் செய்யும்படி பரிந்துரை செய்து 106 உத்தியோகத்தா்களின் பெயா்ப்பட்டியலைக் கையளித்தது. அதன்பின் நிகழ்ந்ததைப்பற்றி அரசாங்கத்திற்கு உள்ளும் வெளியிலும் இருந்து பல வேறுபட்ட விளக்கங்கள் எனக்குத் தரப்பட்டன. இதுவரை எந்தவொரு உத்தியோகத்தா்தானும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்படவில்லை என்று சிலா் வலியுறுத்துகிறாா்கள். வேறு சிலரோ சில உத்தியோகத்தா்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டனா் என்றும் ஆனால் அது பல மாதங்களின் பின்னா் தாமதமாகவே நடந்தது என்றும் சொல்கிறாா்கள். பொலிஸ் அத்தியட்சகரின் கருத்தின்படி அவா் தவறுகள் நோ்ந்துவிடாமலிருக்க அப்பட்டியலை தனது சொந்தக் கோவைகளுடன் ஒப்பிட்டு மீண்டும் பரிசோதித்து உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உடனடியாக எவரையும் வேலை இடைநிறுத்தம் செய்யவில்லை என்றும் அவ்வாறு பரிசீலித்தபொழுது சில தவறுகளைக் கண்டறிந்ததாகவும் அதன்பின்னரே ஏனைய உத்தியோகத்தா்களை இடைநிறுத்தம் செய்ய முற்பட்டதாகவும் என்னிடம் கூறினாா். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி மாத்திரம் தான் அவ்வுத்தியோகத்தா்களை இடைநிறுத்தம் செய்ய முனைந்திருந்தால் வேலை இடைநிறுத்தம் செய்வதற்கான நிா்வாக விதிமுறைகளை தான் மீறியதாகவிருந்திருக்கும் என்று அவா் வற்புறுத்தினாா். ஆனால் இச்சம்பவம் ஏழாவது சட்டச் சீா்திருத்தத்தில் குறிப்பிட்டுள்ள நிா்வாக கட்டமைப்பு தொடா்பான புரிந்துணா்வின்மையைக் காட்டுகிறது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பொலிஸ் உத்தியோகத்தா்களின்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமிருக்கின்றபோது அங்கே பொலிஸ் அத்தியட்சகருக்கு (IGP) ஒரு ஆலோசகா் நிலையே வழங்கப்பட்டுள்ளது; தேசிய பொலிஸ் ஆணைக்குழு (NPC) தவறு செய்யலாம் என்பது உண்மையே ஆயினும் அது அவா்களின் பொறுப்பாகும்.[48] இவ்வாறாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் (NPC) சுதந்திரமான செயற்பாடு உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் அதனது செயற்பாட்டின் முழு வீச்சும் அறியப்படாமல் போய்விடும்.

www.tamilarangam.net

## IV. இன்றைய வெற்றிகளை நாளைய பொழுதுக்கும் தக்கவைத்துக் கொள்ளுதல்

66. இன்று இலங்கையில் உயிர்வாழும் உரிமை குறிப்பிடத்தக்களவு மீறப்படும்பொழுது அதற்கு கொடுக்கும் முக்கியத்துவம் இதுவரை சாதிக்கப்பட்ட ஏனையவற்றிலிருந்து கவனத்தை திசைதிருப்புவதாக இருக்கக்கூடாது. 1971ம், 1989ம் ஆண்டுகளில் ஜே.வி.பி. கலவரத்தின்போதும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முரண்பாடு ஏற்பட்ட ஆரம்பகாலத்திலும் பத்தாயிரக்கணக்கான மக்கள் காணாமற் போயினர் அல்லது இராணுவ செயற்பாடுகளின்போது கொல்லப்பட்டனர். அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் போர்நிறுத்தத்திற்கு உடன்பட்டு சமாதான பேச்சுவார்த்தைக்கு முன்வந்ததன்மூலம் பிரதான கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளனர் என்பதை மறுக்கமுடியாது. போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதுமுதல் இனமுரண்பாட்டினால் கொல்லப்படுபவர்களின் தொகை நூற்றுக்கணக்கிலே இருக்கிறது. இனமுரண்பாட்டு ரீதியாக மாத்தரமின்றி சாதாரண காவற்கடமைகளிலும் முன்னேற்றமேற்பட்டிருக்கிறது. நிர்வாகரீதியாக வழமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், காணாமற் போதல், சித்திரவதை போன்ற பலவிடயங்கள் தற்போது கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன என்பது முன்னேற்றகரமானது.

67. தற்போது மாற்றம் நிகழும் வேகம் சிலசமயம் மிக மெதுவாகவும் அரை-மனதோடும் இருக்கின்றபொழுதும் கடந்தகாலத்தில் நிகழ்ந்தவாறு பாரியளவு மீறல்கள் நிகழுமாயின் அது துயரத்திற்குரியது.

68. இதை மனதிற் கொண்டிருந்த நான் இவ்விஜயத்தின்போது கடந்தகாலத்தில் இலங்கையை மிகவும் சீரழியச் செய்த பலாத்காரமாக காணாமற்போதல்கள் (dissapearances) மீண்டும் நிகழ்வதாகக் கூறும் அறிக்கைகளைக் கண்டபோது மிகவும் சஞ்சலமடைந்தேன். கிழக்குப் பகுதிக்கு நான் மேற்கொண்ட விஜயத்தின்போது தமிழ் இளைஞர்கள் 'வெள்ளைவான்'களினால் (white vans - பாதுகாப்புப் படையினரின் ஒத்தாசையுடன் என்று கூறப்படுகிறது) கடத்திச் செல்லப்படுவதாகவும் சில நாட்களுக்குமுன் கொழும்பில் பொலிஸினால் விடுதலை செய்யப்பட்டிருந்த கிழக்கைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் முச்சக்கரவண்டியில் வரும்பொழுது கடத்திச் செல்லப்பட்டதாகவும் பின்னர் அவர்களின் சடலங்களே கிடைத்ததாகவும் எனக்கு முறைப்பாடு செய்தார்கள். டிசம்பர் மாதத்தில் நாட்டின் வடக்குப் பகுதியிலிருந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (SLHRC) 16 காணாமற்போதல் முறைப்பாடுகளைப் பெற்றிருந்தது. நான் இம்முறைப்பாடுகளைப்பற்றி மேலதிக விபரங்களைப் பெற்று உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள முயற்சிக்கின்ற அதேவேளை, பாதுகாப்பு நிலமையின் தற்போதைய போக்கு கடந்தகாலத்தைப் போல் அதிகாரத் துஷ்பிரயோகத்தை ஊக்குவித்துவிடக்கூடும் என்பதைக் குறிப்பிடுவதற்காக இத்தகவலை இங்கு முக்கியத்துவப்படுத்துகிறேன். அரசாங்கம் இம்முறைப்பாடுகளை உடனடியாகவும் திறமையாகவும் கையாள வேண்டுமென்றும், தடுப்புக் காவலில் வைக்கப்படும் கைதிகளுக்குத் தேவையான சட்டரீதியான பாதுகாப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும் நான் அரசாங்கத்தைக் கோருகிறேன்.

69. பழைய வரலாற்றை அறிந்திருத்தலே அத்துயரச் சம்பவங்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுக்கும் என்பது உண்மை. எதிர்கால நன்மை கருதி கடந்தகால வன்முறைகள் உரியவாறு ஆவணப்படுத்தப்படுவது மிக அவசியமாகும். ஆட்கள் காணாமற்போகும் சம்பவங்களைப்பற்றி விசாரிப்பதற்கு அரசாங்கம் பல ஆணைக்குழுக்களை நியமித்திருக்கின்றபோதும் அச்சம்பவங்களை ஆவணப்படுத்துவதிலும் பகிரங்கப்படுத்துவதிலும் இன்னும் அதிக கவனஞ் செலுத்தவேண்டும். ஆட்கள் காணாமற் போதல் பற்றிய விரிவான தகவற்கோவையைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த ஒரு ஆய்வாளருடனும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு-கிழக்கு செயலகத்தில் 1990ம் ஆண்டுகளில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பிரதேசங்களில் ஆட்கள் காணாமற்போன சம்பவங்களைப்பற்றிய தகவற் கோவையைத் தயாரித்துக்கொண்டிருந்த ஊழியர்களுடனுடம் நான் கலந்துரையாடினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இம்முயற்சிகள் இன்றியமையாதவை. இவ்வாய்வின் முடிவுகள் பொதுமக்களுக்கு பரந்தளவில் கிடைக்கும்வண்ணம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். குற்றங்களும் கிரிமினல் செயற்பாடுகளும் புதைகுழிகளிலும் ஆவணக் காப்பகங்களிலும் மாத்திரம் மறைத்து வைக்கப்பட்டிருந்தால் மனித உரிமைகளின் அடிப்படையில் நிரந்தரமான சமாதானம் கிட்டுவது மிகக் கடினம்.

70. சமாதானச் செயற்பாடுகளுக்கும் நீதியின் அடிப்படையில் தண்டனைகள் வழங்கப்படுவதற்கும் இடையில் சுமூகமற்ற உறவே பெரும்பாலும் நிலவுவதாக பொதுவாக கருதப்படுவதுண்டு. குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில் அது உண்மையாக இருக்கின்றபோதிலும் இவ்விரு எண்ணக்கருக்களும் இலங்கையைப் பொறுத்தவரையில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாயிருக்கின்றன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court - ICC) நியாயாதிக்கமானது, அந்நியாயாதிக்கம் அந்நாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நிகழும் வன்முறைகளை விசாரிக்குமளவே அதிகாரமுடையது என்பதுடன் பின்நோக்கிய திகதிகளில் நடந்த வன்முறைகளை அல்ல. ஒப்பீட்டளவில் அமைதி நிலவும் தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொள்வது என்பது கடந்தகாலத்தில் நிகழ்ந்த பாரிய வன்முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெளிக்கொணர்வதன்மூலம் யுத்தநிறுத்தத்தை வலுப்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையில் மனிதஉரிமைகள் முக்கிய இடத்தை வகிப்பதை உறுதிப்படுத்துவதாகும். ரோம் சரத்து (Rome Statute) அமுலில் இருந்திருக்குமாயின் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்படக்கூடிய மிகப் பாரதூரமான மனிதஉரிமை மீறல்களை இரு தரப்பாரும் செய்துள்ளனர். தற்போதய நிலையில் இவ்வாறு நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொள்வது மீண்டும் அவ்வன்முறைகள் நிகழாது என்ற நம்பிக்கையை அனைவருக்கும் ஊட்டும்.[49]

## V. பரிந்துரைகள்[50]

யுத்தநிறுத்தத்தை வலுப்படுத்தலும் மனித உரிமைகளையும் மனிதாபிமானச் சட்டத்தையும் மதித்தலும்

71. இதை எழுதும்போது அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் 2002 பெப்ரவரி இறுதிப்பகுதியில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதைப் பற்றியும் நடைமுறைப்படுத்துவதை பற்றியும் பேசுவதற்கு உடன்பட்டிருக்கிறார்கள். அண்மைக்காலத்தில் யுத்தநிறுத்தமும் யுத்தநிறுத்த கண்காணிப்பு செயற்பாடுகளும் பாதிப்புற்றிருப்பதற்கு பாரியளவில் நிகழ்ந்த சட்டத்திற்கு புறம்பான கொலைகளே அடிப்படைக் காரணமாகும். பேச்சுவார்த்தையின்போது பின்வரும் விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

அ) அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் 2003ம் ஆண்டில் நடந்த பேச்சுவார்த்தையின்போது தாம் ஏற்றுக்கொண்டதுபோல் மனித உரிமைகள் தொடர்பான உடன்பாடொன்றை எட்டுவதன்மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்தவேண்டும். வன்முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் ஆவணப்படுத்தவும், விசாரணை செய்யவும், உரிய நிர்வாக அலகுகளிடம் முறையிடவும் கூடிய அதிகாரத்துடன், சமூகத்தின் பல மட்டங்களிலும் வேலை செய்யும் ஏனைய மனித உரிமை நிறுவனங்களுடன் இணைந்து செயற்படக்கூடியதான, ஒரு செயலூக்கமுள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்.

ஆ) அரசாங்கம் தனது மனித உரிமைகள் சார் கடப்பாட்டை பூர்த்திசெய்யுமுகமாக உடனடியாக கீழே தரப்பட்டுள்ள படிமுறைகளை மேற்கொள்வது அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இ) தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் மனித உரிமைகளை மதிப்பதாகக் கூறிய கடப்பாட்டின் அடிப்படையிலும் அரசு அல்லாத தரப்பினர் யாவரும் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தை மதித்து நடக்கவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கைக்கு அமையவும் தாம் உண்மையிலேயே மனித உரிமைகளை மதிப்பதனை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஈ) இனமுரண்பாட்டின் பங்குதாரர்களாக சகல தரப்பினரும், அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள், கருணா குழுவினர் உட்பட, ஆகஸ்ட் 12, 1949 இன் ஜெனீவா சாசனத்தின் பொதுச் சரத்து 3 இன் சட்டதிட்டங்களுக்கமையவும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின்படியும் நடக்க வேண்டும். குறிப்பாக சர்வதேச மனிதாபிமானச் சட்டம் போரின்போது பொதுமக்களையும் ஆயுததாரிகளையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டுமென்று கோருகிறது. போர்த் தாக்குதலில் நேரடியாக ஈடுபடாத (பொதுமக்களாக இல்லாமலிருந்தாலும், தாக்குதலில் ஈடுபடாதிருக்கின்ற) எவரையும் கொல்வது கண்டிப்பாகத் தடுக்கப்பட்டிருக்கிறது.

72. யுத்தநிறுத்த ஒப்பந்தம் மறுசீரமைக்கப்படுமாயின் இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் (Sri Lanka Monitoring Mission - SLMM) பாத்திரம் சமாதான நடவடிக்கையின் அனுசரணையாளராக தொழிற்படுவதிலிருந்து விலக்கப்பட வேண்டும். உடனடி நடவடிக்கையாக இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) செயற்பாட்டை வலுப்படுத்துவதற்கு பின்வரும் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

அ) கொலைகளுக்குப் பொறுப்பான நபர்களையும் அமைப்பையும் இனங்காணக்கூடியதாக நீடித்த தொடர் கண்காணிப்பு.

ஆ) கிடைத்த முறைப்பாடுகள், விசாரணையின் முடிவுகள் என்பன உள்ளடங்கலாக பொருத்தமான தணிக்கைகளுடன் உடனடியானதும் இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான பிரசுரங்கள்

இ) சாட்சிகளைப் பாதுகாப்பதற்கு உரிய உடன்படிக்கை உருவாக்கப்படல்

ஈ) ஒவ்வொரு இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு (SLMM) கள அலுவலகத்திலும் மனித உரிமை சார்ந்த உயர் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுதலும் பிரதான தலமை அலுவலகத்தில் அனுபவமிக்க மூத்த மைய அதிகாரியொருவர் நியமிக்கப்படுதலும்.

73. அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகமானது (Office of the High Commissioner for Human Rights) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு (SLMM) மற்றைய ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்கள் போன்றவற்றிற்கு தொழில நுட்ப உதவியும் ஒத்தாசையும் வழங்குவதன் மூலம் பரந்த கண்காணிப்பு வடிவமொன்றை உருவாக்க உதவும்படி அழைப்பு விடுக்கவேண்டும்.

அரசாங்கம்

74. அரசாங்கமானது கருணா குழுவோடு எவ்விதத்திலும் தமக்கு தொடர்பில்லை என்று மறுத்திருப்பதை மீண்டும் பகிரங்கமாக வலியுறுத்த வேண்டும். அத்துடன் இதனை மீறும் இராணுவ அதிகாரிகளின்மீது ஒழுக்காற்று நடவடிக்கையெடுக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

75. எச்சந்தர்ப்பத்தில் யாருக்கு நட்டஈடு வழங்கப்படுகிறது என்பதை விரிவான அறிக்கையிடும்படி அரசாங்கம் கோரப்படுகிறது. சட்டத்திற்குப் புறம்பாகக் கொல்லப்பட்ட ஆயுததாரிகள் அல்லாத நபர்களின் குடும்பங்களுக்கு பொருத்தமானதும் நியாயமானதுமான முறையில் நட்டஈடு பெறக்கூடிய

www.tamilarangam.net

முறையை உறுதிப்படுத்த வேண்டும். சிலசமயங்களில் போதுமான நட்டஈடு வழங்கப்படுவதில்லை. ஆனால் பெரும்பாலும் நட்டஈடு வழங்கப்படுவதே இல்லை.

### பொலிஸார்

76. கொலைகளை விசாரணை செய்வதற்கு யுத்தநிறுத்த ஒப்பந்தம் தடையாக இருக்கக்கூடாது. சகல கொலைகளையும் தீவிரமாகப் புலன்விசாரணை செய்யுமாறும் சாத்தியமானவிடத்து குற்றவாளிகளைக் கைது செய்யும்படியும் அரசாங்கம் உறுதியாகவும் தெளிவாகவும் பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும்.

77. கிரிமினல் குற்றங்களை விசாரிப்பதற்கும் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கும் பொலிஸ் துணைப்படையினர் (police reservists) சகலருக்கும் போதுமான பயிற்சி வழங்கப்படுவது தற்போது அவசியமான அவசரத் தேவையாகும்.

78. தமிழில் ஒழுங்காக உரையாட முடியாத ஒரு பொலிஸ் படைப்பிரிவு சாதாரண பொதுமக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெறுவதென்பது சாத்தியமற்ற ஒன்றாகும். அரசாங்கம் தமிழ் மற்றும் தமிழ்-பேசும் பொலிஸ் அதிகாரிகளை உள்வாங்குவதற்கு, குறிப்பாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் கடமையாற்றுவதற்கு, நிதி மற்றும் ஏனைய ஊக்குவிப்புகள் சார்ந்த பொதுத் திட்டமொன்றை உருவாக்க வேண்டும்.[51]

79. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பாதகமான விளைவுகளை தவிர்ப்பதற்காகவும் குற்றச்செயல்களை தடுப்பதற்காகவும் அரச பொலிஸாருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் காவற்கடமையைச் செய்பவர்களுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தவும் அதனை ஒழுங்குபடுத்தவும் முன்வரவேண்டும்.

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு **(National Police Commission – NPC)**[52]

80. தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

81. அரசாங்கமானது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் (NPC) பொலிஸ் மா அதிபருக்கும் (IGP) யாப்பின்பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு உரிய மதிப்பளிப்பதை பகிரங்கமாக உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறே தேசிய பொலிஸ் ஆணைக்குழு பதவி உயர்வுகள், இடமாற்றல்கள், ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் வேலையிலிருந்து நீக்குதல் போன்ற விடயங்களில் தனது அதிகாரத்தை செயற்படுத்தும்பொழுது பொலிஸ் மா அதிபர் ஒரு ஆலோசகர் தரத்திலேயே இயங்க வேண்டும்.[53]

82. தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது விசாரணைகளையும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் திறமையாகவும் சிறப்பாகவும் மேற்கொள்வதற்கு தேவையான வளங்களை (resources) அரசாங்கம் வழங்க வேண்டும்.

### சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சட்டம் **(ICC Statute)**

83. அரசாங்கம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டக்கோவையை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கை இராணுவவீரர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தனிநபர்களின் கிரிமினல் பொறுப்பைப் பற்றிய விபரங்கள் தெரியப்படுத்தப்பட்டிருக்கப்பட வேண்டும். அத்துடன் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் சரத்துக்கள் தொடர்பான பயிற்சி அளிக்கப்படவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ விடுதலைப் புலிகள் (Liberation Tigers of Tamil EeLam)

84. தமிழீழ விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றபோதும் அதனைத் தாம் பொறுப்பேற்க மறுக்கும் கொலைகளை அவர்கள் வன்மையாகக் கண்டிக்கவேண்டும். வெறுமனே மறுப்பது மாத்திரம் போதுமானதோ நம்பத்தக்கதோ அல்ல.

85. தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லாத, அவர்களுடன் தொடர்புள்ள தமிழ் பொதுமக்கள் உட்பட, தமிழீழ விடுதலைப் புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதில் கருத்து சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், அமைப்புகளில் இணைந்துகொள்வதற்கான சுதந்திரம், குடும்ப வாழ்வுக்கான சுதந்திரம், வாக்களிக்கும் உரிமை உட்பட ஜனநாயகரீதியான பங்குபற்றுதல்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் என்பவற்றை மதிப்பது பிரதானமானது. மனித உரிமைகளுக்கான வடக்கு-கிழக்கு செயலகத்தின் சாசனங்களுக்கமைய (North-East Secretariat on Human Rights) செயற்படுவதை தமிழீழ விடுதலைப் புலிகள் குறிப்பாக உறுதிப்படுத்த வேண்டும்.

86. பொதுமக்கள் ஆயுதக் குழுவினர் மற்றும் தற்காப்புப் படைகள் என்ற கோதாவில் 'மக்கள் படை'களுக்கு ஆயுதப் பயிற்சி, ஆயுதங்கள் வழங்குதல், ஊக்குவித்தல் போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

### சர்வதேச சமூகம்

87. பரந்த கண்காணிப்பு முறையொன்று உருவாக்கப்படும்வரை ஐக்கிய நாடுகள் சபையின் உள்நாட்டு மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் உடனடியாக விரிவாக்கப்படுதல் வேண்டும்.

88. அக்கறையுள்ள அங்கத்துவ நாடுகள், குறிப்பாக, உதவிவழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமைக் குழுவும் (Donor Co-Chairs), இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு உதவும் நாடுகளும் மேலும் விரிவான மனித உரிமைகள் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு அரசியல், பொருளாதாரம் மற்றும் மனிதவள உதவிகளை இலங்கைக் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கோ அல்லது அவ்வாறான வேறு சர்வதேச அமைப்புகளுக்கோ வழங்க வேண்டும்.

89. ஐக்கிய நாடுகள் சபையின் குறிப்பிடத்தக்க புலம்பெயர் தமிழர்களைக் கொண்ட சகல உறுப்புரிமை நாடுகளின் அரசாங்கங்களும் இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அந்தச் சமூகங்களுடன் ஆழமான கலந்துரையாடல்களில் இறங்கவேண்டும். இப்புலம்பெயர் சமூகங்கள் தமக்கிருக்கும் குறிப்பிடத்தக்களவு அரசியல், பொருளாதார செல்வாக்கையும் நிதிவழங்கும் இயலுமையையும் பயன்படுத்தி மனித உரிமைகளை மேம்படுத்தவும், மதிக்கும்படியும் நிர்ப்பந்திப்பது அவர்களது பொறுப்பும் கடமையுமாகும்.

### தொடர்-கண்காணிப்பு

90. இவ்வறிக்கையின் பின்னான நிலமைகளையும் பரிந்துரைகள் அமுல்செய்யப்பட்டதையும் விசேட ஆணையாளர் மீளாய்வு செய்வார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குறிப்புகள்

[1] இவ்வறிக்கை முழுவதும் 'சட்டத்திற்குப் புறம்பான கொலைகள்' என்ற பதம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் சட்டபூர்வமான மரண தண்டனைகள் தவிர்ந்த கொலைகளையே குறிக்கின்றது. வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 'நீதிக்குப்புறம்பான', 'விசாரணைகளற்ற' 'எழுந்தமானமான' கொலைகள் என்ற வகையில் இது வகைப்படுத்தப்படவில்லை. அதுமட்டுமல்லாது எந்தச் சம்பவத்தையும் இவ்வடிப்படையில் தரம்பிரிக்க முனையவில்லை. மாறாக, பொதுச் சபையினதும் மற்றும் ஆணைக்குழுவினதும் (General Assembly and Commission) காலங்காலமாக நிறைவேற்றப்பட்ட பல்வேறு பிரேரணைகளினூடாக பரிமாணமடைந்த பிரமாணத்திலேயே (Mandate) அதிக கவனம் செலுத்தப்பட்டது.

[2] இக்கட்டுரையை எழுதும்போது டிசம்பர் 4ம் திகதி 2005 முதல் அரச படையினருக்கு எதிராக நடந்த தாக்குதல் சம்பவங்களில் இலங்கை இராணுவம், பொலிஸ் படை, ஊர்காவல் படை என்பவற்றைச் சேர்ந்த 78 பேர் மரணமடைந்துள்ளனர்.

[3] SLMM, "யுத்தநிறுத்த ஒப்பந்தமும் சமாதான பேச்சுவார்த்தைகளும் ஆபத்தில்" 29 டிசம்பர் 2005. http://www.slmm.lk/intors/press_releases.htm இல் பார்க்கவும்.

[4] இலங்கை 20 மில்லியன் சனத்தொகையை உடையது. அதில் 74% சிங்களவர், 13% இலங்கைத் தமிழர், 7% இலங்கை மற்றும் மலே முஸ்லிம்கள், 6% இந்திய வம்சாவளி தமிழர், 1% ஏனையவர்கள்.

[5] இனமுரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட கொலைகளைப் பற்றிய முழு விபரத்தையும் SLMM வழங்குவதில்லை. நான் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பொதுமக்கள் கொலை செய்யப்பட்டதைப் பற்றி 138 முறைப்பாடுகளைப் SLMM பெற்றிருந்தது. அவற்றில் 20 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டிருந்தது, 14 முறைப்பாடுகள் யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களாக அடையாளங் காணப்பட்டிருந்தன (LTTE இனரால்). (இத்தரவுகள் பெப்ரவரி 2002 தொடக்கம் நவம்பர் 2005 வரையான காலப்பகுதியிலாகும்.) பொதுமக்களைப் படுகொலை செய்வது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 2.1ம் சரத்தை மீறுவதாகும். (விபரம் காண்க http://www.slmm.lk/intors/press_releases.htm). இ.க.குழுவினருக்கு கிடைக்கப்பெற்றுள்ள 138 முறைப்பாடுகளிலும் மொத்தமாக எத்தனை பேர் கொல்லப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்ற விபரங்கள் எதுவும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அது மாத்திரமின்றி போர் புரியும் தரப்பினர் (ஆயுததாரிகள்) எவ்வளவு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற விபரமும் வெளிப்படுத்தப்படவோ பகிரங்கப்படுத்தப்படவோ இல்லை. (போர் புரியும் தரப்பினர் கொல்லப்படுவது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சகல இராணுவ நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் 1.2வது சரத்தை மீறும் செயலாகும். இருந்தபோதிலும் இ.க.குழு (SLMM) சரத்து 1.2 தொடர்பான யுத்தநிறுத்த மீறல்களான படுகொலைகளை இவ்வடிப்படையில் வேறுபடுத்தி நோக்கவில்லை.) மேலதிகமாக, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாத தரப்பினரான கருணா குழு மற்றும் ஏனைய ஆயுதமேந்திய குழுக்களினால் மேற்கொள்ளப்படும் கொலைகள் இத்தரவுகளில் சேர்க்கப்படவில்லை. அரசாங்கமும் வேறு பலரும் எனக்கு படுகொலைகளைப் பற்றி விரிவான, விளக்கமான பட்டியல்களைத் தந்தனர். அரசாங்கம் செப்ரெம்பர் 30, 2005 வரை

www.tamilarangam.net

LTTEயினர் 363 பேரைக் கொன்றுள்ளதாக கூறுகிறது. (அரச ஸ்தாபனங்கள் பலவற்றிடமிருந்து நான் பட்டியல்களைப் பெற்றேன். கொலைகள் பற்றிய அப்பட்டியல்களுக்கிடையிலான தொடர்பு பெரும்பாலும் தெளிவானதல்ல.) EPDP (ஈழமக்கள் ஜனநாயக முன்னணி) ஒக்டோபர் 14, 2005 வரை தமது உறுப்பினர்கள் 43 பேர் கொல்லப்பட்டு விட்டதாகக் கூறுகிறது. EPRLF (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி) டிசம்பர் 5, 2005 வரை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் LTTE யினர் 334 பேரை கொன்றுள்ளதாகக் கோருகின்றனர். (இந்த 334 பேரில் 170 பேர் ஏப்ரல் 9, 2004 இல் கருணா – LTTE பிளவின்போது நடந்த பெரிய சண்டையில் கொல்லப்பட்ட கருணா அணி அங்கத்தவர்கள் ஆவர்.) எந்தவொரு சம்பவமும் பொதுவாக கொலை செய்த அல்லது பலியானவரின் விபரங்கள் தவிர்ந்த வேறு தகவல்களை உள்ளடக்கவில்லை. இருந்தபோதிலும் ஒரு சிவில் சமூக அமைப்பு ஜனவரி 1 முதல் நவம்பர் 21, 2005 வரையான காலப்பகுதியில் சகல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் 295 படுகொலைகளைப் பதிவுசெய்திருக்கிறது. (Foundation for Co-existence அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை). இன்னொரு ஊடகம் ஜனவரி 1 முதல் நவம்பர் 13 2005 வரையான காலப்பகுதியில் 338 கொலைகளைப் பதிவுசெய்திருக்கிறது. இவ்விரு எண்ணிக்கைகளுக்கும் இடையிலான வேறுபாடு பிரதானமாக சில கொலைகளின் தகவல் தெளிவின்மையால் அவை இனமுரண்பாட்டுடன் தொடர்புடைய அல்லது தொடர்பற்ற பொதுவான சமூகக் கொலைகளா என்ற சந்தேகத்தினால் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

[6] யுத்தநிறுத்த ஒப்பந்தம். சரத்து 1.8

[7] யுத்தநிறுத்த ஒப்பந்தம் சரத்து 1.13 ஆயுதமற்ற LTTE உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கில் உள்ள அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் 'அரசியல் வேலைகள்' செய்வதற்காக சுதந்திரமாக நடமாடுவதை அனுமதிக்கிறது.

[8] டிசம்பர் 2005க்கு முன்னர் கிட்டத்தட்ட அரைவாசிக்கு மேலான 2005 ஆண்டுக் கொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே நிகழ்ந்துள்ளன.

[9] "STF மற்றும் இலங்கை அமைச்சர்கள் துணைப்படை நடவடிக்கைகளில் சட்டவிரோதமாக ஈடுபட்டுள்ளனர்." தமிழ்நெற், டிசம்பர் 12, 2005 http://www.tamilnet.com/art.html?catid=13&artid=16531.

[10] நான் சென்றுபார்த்த போது காயப்பட்டவர்களில் எண்மர் கவலைக்கிடமான நிலையிலிருந்தனர்.

[11] "STF (விசேட அதிரடிப்படை), இலங்கை அமைச்சர்கள் பரா-மிலிட்டரி (துணைப்படை) நடவடிக்கைகளுடன் தொடர்படையவர்கள்", தமிழ் நெற் 12 டிசம்பர் 2005. பார்க்க http://www.tamilnet.com/art.html?catid=13&artid=16531. "இரண்டு துணைப்படைவீரர்கள் சரணடைந்தனர், முஸ்லிம் மக்களுக்கெதிரான தாக்குதல்களை தாமே செய்தாக கருணா குழு பொறுப்பேற்கிறது", தமிழ்நெற் டிசம்பர் 6, 2005. பார்க்க http://www.tamilnet.com/art.html?catid=13&artid=16531.

[12] UNHCR நிறுவனத்தால் ஜுன் 2001 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின்படி சர்வதேச அளவில் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கை 817,000 என்று மதிப்பிடப்படுகிறது. அவர்களில் பெரும்பான்மையானோர் அகதி அந்தஸ்து அல்லது தஞ்சம் கோருபவர்களாக உள்ளனர். கனடா கிட்டத்தட்ட 400,000 தமிழர்களைக் கொண்டுள்ளதுடன் அடுத்ததாக ஐரோப்பா (200,000), இந்தியா (67,000) மற்றும் ஐக்கிய அமெரிக்கா (40,000), அவுஸ்திரேலியா (30,000) ஆகிய நாடுகள் உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[13] 2004 இல் செயலாளர்-நாயகம் அவர்களின் உயர்மட்ட அறிக்கையான மிரட்டல், சவால் மற்றும் மாற்றம் என்ற விரிவான அறிக்கையின் இறுதியில் “எந்தவொரு ஆயுதப் போராட்டத்திலும் பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்படுவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது” என்று உறுதிப்படுத்தப்படுகிறது. பார்க்க A More Secure World: Our Shared Responsibility, (United Nations, 2004), பந்தி. 160.

[14] இவ்வாய்வுடன் தொடர்புடையதாக LTTEயானது மனித உரிமைகளுக்கான வடக்கு கிழக்கு செயலகத்தை (North East Secretariat on Human Rights) ஸ்தாபித்து NESOHR மனித உரிமைகள் சாசனத்தின் இறுதிப் பதிப்பை ஒக்டோபர் 2005 இல் வெளியிட்டது. அவ்வறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளில் ஒன்று “சர்வதேச மனித உரிமைகள் சாசனப்படியும் சர்வதேச மனித உரிமை சரத்தின்படியும்” (Universal Declaration of Human Rights and the International Covenants on Human Rights) மனித உரிமைகளை மதித்து நடப்பதை உறுதிப்படுத்துவது ஆகும். பார்க்க http://nesohr.org/charter/Charter-English.PDF

[15] E/CN.4/2005/7, பந்தி. 76.

[16] SC Res. 1265 (1999), preamble; SC Res. 1193 (1998), paras.12, SC Res. 814 (1993), para.13.

[17] இவ் ஏற்றுக்கொள்ளலானது LTTE யின் சர்வதேச செயலகத்தினால் நவம்பர் 6, 1997 இல் ஐக்கிய அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு - கொலம்பியா மாவட்டம் - அனுப்பப்பட்ட கீழ்க் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் உள்ளடக்கத்தில் “தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இன முரண்பாட்டில் நேரடியாகப் பங்கெடுக்காத பொதுமக்கள் எவரையும் ஒருபோதும் தாக்குவதோ கொல்வதோ இல்லை” என்று கூறப்பட்டுள்ளது. பார்க்க Letter of Authorization for the Filing of a Legal Action and Representation of the Liberation Tigers of Tamil Eelam in the Judicial Review of the Terrorist Designation of the Organization Pursuant to Section 219 of the Anti-Terrorism and Effective Death Penalty Act of 1996.

[18] ICRC நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வான Customary International Humanitarian Law (J.M. Henckaerts and L.Doswald-Beck, 2005 பதிப்பு) இன்படி “முரண்பாட்டில் பங்குகொள்ளும் சகல தரப்பினரும் எல்லாச் சமயங்களிலும் போரிடுபவர்களையும் பொதுமக்களையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். தாக்குதல்கள் எப்போதும் போரிடும் மற்றைய தரப்பினரை இலக்கு வைத்து மாத்திரமே மேற்கொள்ளப்படலாம். ஒருபோதும் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தப்படக்கூடாது” என்று பந்தி.3 இல் வலியுறுத்தப்படுகிறது. சரத்து 13(3) பிரகாரம் “பொதுமக்கள் இப்பாதுகாப்பைப் பெறுபவர்களாக இருக்கலாம், அவர்கள் முரண்பாட்டின் ஒருபகுதியினராக சம்பந்தப்படும்வரை” என்று கூறுகிறது. அத்துடன் சரத்து 8(2) (ந) (ை) ரோம் பிரகடனத்தின்படி “பொதுமக்களை குறிவைத்து தாக்குவதோ அல்லது போரில் பங்கேற்காதவர்களை தாக்குதோ” போர்க்குற்றங்களில் ஒன்றாகும்.

[19] யுத்தநிறுத்த ஒப்பந்தம். சரத்து 1.2

[20] யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினால் காவற்துறையின் செயற்பாடுகளில் ஏற்பட்டிருக்கும் தடைகள் நீக்கப்படவேண்டும். யுத்தநிறுத்த ஒப்பந்தம் அரசாங்கத்தின் “ஆயுதமேந்திய படையினரும்” LTTE யினரின் “ஆயுததாரிகளும்” ஒருவரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பகுதிக்குள் மற்றவரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துகின்றபோது பொலிஸ் உத்தியோகத்தர்களின் (காவற் படையினரின்) நடமாட்டத்தையிட்டு குறிப்பாக எதுவும் கூறவில்லை. ஆயுதமேந்திய மற்றைய தரப்பினர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடமாடுவதைப்பற்றி இருதரப்பினருமே அதிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அக்கறையுடையவா்களாக இருக்கிறாா்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிற அதேசமயத்தில் நடைமுறையில் பொலிஸ்படையினா் ஒருவரது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மற்றவா் நுழைவதற்கு வழியில்லாமலிருக்கின்றனா்.

[21] கவனிக்க: தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்பான, தமிழ் பேசும் அதிகாரிகளின் பற்றாக்குறையானது "பாதுகாப்பு நிலவரம் தொடா்ந்தும் சீா்கெட்டுவருவதற்கு ஒரு முக்கியமான குறையாக உள்ளது" என்ற ஆய்வுமுடிவு. "The Human Rights Situation in the Eastern Province : Update (April 2005), p.27.

[22] சிங்கள உத்தியோகத்தா்கள் தமிழ்மொழியைப் பயில்வதற்கு நிதிசாா் ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதாகவும் புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தா்களுக்கு 3 மாத தமிழ்மொழி பயிற்சிநெறி வகுப்பு ஒன்றை தான் அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் பொலிஸ் ஆணையாளா் (IGP) தெரிவித்தாா். தற்போது வழங்கப்படும் சம்பள ஊக்குவிப்பானது மொழியில் உயா்மட்ட தோ்ச்சியை வெளிப்படுத்துவதற்கானவன்றி, ஒப்பீட்டளவில் குறைந்த கால அளவுடைய பயிற்சிநெறியை பூா்த்தி செய்வதற்காகவே வழங்கப்படுகிறது. மொழிப்பயிற்சிநெறியை நடாத்துவது நல்ல திட்டமாகவிருந்தாலும் 2001ம் ஆண்டுக்குப் பின் புதிய நியமனங்கள் ஒழுங்காக மேற்கொள்ளப்படாமையினால் அதன் பலாபலன் கொள்கையளவில் மாத்திரமே இருக்கிறது.

[23] SLMM மாா்ச் 8, 2005 வெளியிட்ட பத்திரிகை அறிக்கை

[24] யுத்தநிறுத்த ஒப்பந்தம், சரத்து 3.2

[25] யுத்தநிறுத்த ஒப்பந்தம், சரத்து 3.2 – 3.3

[26] யுத்தநிறுத்த ஒப்பந்தம், சரத்து 3.6

[27] ஹகூனில் 2003 ம் ஆண்டு நடைபெற்ற சமாதானப் பேச்சுவாா்த்தையின் பின்னா், பிரதான கண்காணிப்பு நடவடிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) மேற்கொள்வதாக சா்வதேச சமூகத்தின் ஆதரவுடன், முடிவுசெய்யப்பட்டது. இருந்தபோதிலும் HRC தாமே குறிப்பிட்டுள்ளவாறு "எந்தவொரு தேசிய அல்லது பிராந்திய மனித உரிமைகள் ஸ்தாபனமும் வடக்கு கிழக்கில் மனித உரிமைகள் பேணப்படுவதை திறமையாக கண்காணிக்கவும் செயற்படுத்தவும் இயலாது என்று கருதுவதாகவும்… அதற்கான சா்வதேச அதிகாரத்தையும் நியாயாதிக்கத்தையும் எந்தவொரு சா்வதேச நிறுவனமோ தனிநபரோ கொண்டிருக்கவில்லை". Human Rights Commission of Sri Lanka, *The Human Rights Situation in the Eastern Province* (Dec.2003), p.33.

[28] இருந்தபோதிலும் SLMM இன் கட்டுப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் சாா் அட்டவணையின் பரிமாணத்தைப் பற்றிய விமா்சனங்களை மீளாய்வு செய்யும்பொழுது நோக்கத்தின் (Mission) கட்டுப்படுத்தப்பட்ட 'நியாயாதிக்கம்' அரசாங்கத்தினதும் LTTE யினதும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சா்வதேச சட்டங்களின்கீழ் ஏற்கனவே-நிலவுகின்றதும் தொடா்ச்சியானதுமான சட்டரீதியான கடப்பாடுகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தவில்லை என்பது மனதிற் கொள்ளப்படவேண்டும். அதேபோல் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படவோ ஒழுங்குபடுத்தப்படவோ இல்லை என்ற விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதிலும் அவதானமாக இருக்கவேண்டும். எவ்வாறாயினும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் பொதுமக்களுக்கெதிரான தாக்குதல்கள், வன்முறைகளில் ஈடுபடலாகாது என்றும் எச்சந்தா்ப்பத்திலும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் தடுக்கிறது. இலங்கையில் நிகழும் மனித உரிமை

www.tamilarangam.net

மீறல்களுக்கு படுகொலைகளே பிரதான காரணமாக இருப்பதனால் யுத்தநிறுத்த ஒப்பந்தமானது முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும்பட்சத்தில் அதுவே சமாதானத்தையும் மனிதஉரிமைகளை அனுபவிக்கும் நிலைக்கும் இட்டுச் செல்லுவதில் பெரும்பங்கு வகிக்கும் என்பது உண்மையாகும்.

[29] உதாரணமாக, பெப்ரவரி 2005 இல் LTTE யின் தலைவரான கௌசல்யன் மறைந்திருந்து தாக்கும் தாக்குதலொன்றில் கொல்லப்பட்டதையும் கிழக்கில் நிகழ்ந்த அதுபோன்ற வேறு பல தாக்குதல்களை விசாரிப்பதற்குமென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை.

[30] 65,000 ஆண், பெண் பொலிஸாரில் 20,000 பேர் நிரந்தர பொலிஸ்பிரிவிலும் 45000 பேர் பதில் கடமை (Reserve) பிரிவிலும் உள்ளனர்.

[31] பார்க்க அறிக்கை Commission of Inquiry into Involuntary Removal or Disappearance of Persons in the Northern and Eastern Provinces (1997).

[32] பயங்கரவாத தடைச்சட்டம் (Prevention of Terrorism Act), அவசரகாலச்சட்டம் (Emergency Act) என்பவற்றில் உள்ள பிரச்சினைக்குரிய அம்சங்களை எனக்கு முன்னர் 1997 இல் இலங்கைக்கு விஜயம் செய்த விசேட ஆணையாளர் அடையாளம் கண்டு அறிக்கையிட்டுள்ளார். E/CN.4/1998/68/Add.2,params. 71-90. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 2.12 "பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தேடுதல் மற்றும் கைது செய்தல் என்பன நிகழமாட்டாது என்று இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர். உரிய குற்றவியல் (கிரிமினல்) சட்டத்தின்கீழ் மாத்திரமே கைதுகள் செய்யப்படும்" என்று கூறுகிறது.

[33] இலங்கை பொலிஸ் தற்போது தேசிய பாதுகாப்பு அமைச்சின்கீழ் - பொதுப் பாதுகாப்பு, சட்டம் மற்றும் நீதி – கொண்டுவரப்பட்டுமை பாரதூரமான பிரச்சினைக்குரிய விடயமாகும். (பார்க்க: http://www.mod.gov.lk/role.html). பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களை விசாரிக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு இருக்குமிடத்து இவ்வேற்பாடு அவ்விசாரணைகள் சுதந்திரமாகவும் நீதியாகவும் மேற்கொள்ளப்படுவதை பெரிதும் பாதிக்கும். பொலிஸ் படை இராணுவமயமாக்கப்படுவது சிக்கலுக்குரிய ஒரு காரணியாக இருக்கும் இவ்வேளையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இவ்வேற்பாடு பிரச்சினையை தீர்ப்பதற்கு எவ்விதத்திலும் உதவப் போவதில்லை.

[34] இலங்கை சிவில உரிமைகள் அமைப்பு (The Civil Rights Movement of Sri Lanka) என்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனம் பின்வரும் சம்பவங்களை இலங்கை மனித உரிமைககள் கண்காணிப்புக் குழுவின் (Humen Rights Commission of Sri Lanka – HRC) கவனத்திற்கு கொண்டுவந்தது. HRC அவற்றை ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரிடம் விசாரணைக்காக கையளித்துள்ளது. இவ்வறிக்கையை எழுதும் காலத்தில் இவ்வழக்குகள் விசாரணையில் இருந்தன.

[35] இலங்கையில் கைது செய்யப்பட்டு, பொலிஸ் காவலில் இருந்தபோது சித்திரவதை செய்யப்பட்டதனால் கைதிகள் மரணமடைந்த சட்டத்திற்கு புறம்பான, சட்டவிரோதமான அல்லது எழுந்தமான கொலைகள் பலவற்றை இவ்விசேட ஆணையாளர் பதிவு செய்துள்ளார். பார்க்க உதாரணமாக, E/CN.4/2005/7 Add.1, paras. 649-59, 61-65; E/CN.4/2003/3Add.1,paras 461, 462 (பதில்கள் E/CN.4/2004/7Add.1 para538 இல்). மேலும் பார்க்க நவம்பர் 22, 2005 கடிதம் E/CN.4/2006/53/Add.1.

[36] ஜனவரி 1 முதல் ஒக்டோபர் 30, 2005 வரை தேசிய பொலிஸ் ஆணைக்குழு (National Police Commission) பொலிஸ் வன்முறை மற்றம் சித்திரவதை தொடர்பாக 221 முறைப்பாடுகளைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெற்றிருந்தது என்று எனது விஜயத்தின்போது எனக்குக் கூறப்பட்டது. அவற்றில் 6 முறைப்பாடுகளில் கைதிகள் மரணமடைந்திருந்தனர். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளால் தடுப்புக்காவலில் இருக்கும்பொழுது ஏற்படுத்தப்படும் மரணங்கள் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்விசேட ஆணையாளர் 2003ம் ஆண்டில் அவ்வாறான 52 குற்றச்சாட்டுகளைப் பதிவுசெய்தார். (E/CN.4/2004/56/Add.1) 2004ம் ஆண்டில் 76 குற்றச்சாட்டுகள் (E/CN.4/2005/62/Add.1). CAT ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான இரண்டாவது காலாண்டு அறிக்கையில் (CAT/C/LKA/CO/1/CRP.2) (23 நவம்பர் 23, 2005) காணப்படும் அவதானிப்பின்படி "பரவலான சித்திரவதை மற்றும் வன்முறை தொடர்ச்சியாக அரசாங்க பொலிஸ் படையினராலேயே (குறிப்பாக) மேற்கொள்ளப்படுவதாக நன்கு பதிவுசெய்யப்பட்டுள்ள பல குற்றச்சாட்டுகள் உள்ளன".

[37] இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்திற்கு சட்டரீதியான கடப்பாடு உள்ளது. பிரதானமாக கடப்பாடும் அதனுடன் தொடர்புடைய சட்டரீதியான நடவடிக்கைக்குரிய பொறுப்பும் அரசாங்கங்களின்மீதே சுமத்தப்பட்டாலும் தனிப்பட்ட நபர்களின்மீது உரிய சட்டரீதியான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் பொறுப்பு அரசாங்கங்களினதே. குறிப்பாக, அரசாங்கமானது தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு. சட்டம் நீதி சார்ந்ததும் ஏனையவையும், உயிர் வாழும் உரிமையைப் பாதுகாக்கவும் மீறல்கள் நிகழும்பொழுது உரிய நடவடிக்கை எடுக்கவும் பொறுப்புடையதாகும். பாரதூரமான மீறல்கள் நிகழும்போது அவற்றை விசாரிக்கவும் தண்டிக்கவும் நீதி வழங்கவும் கடப்பாடுடையதாகவும் அரசு இருக்கிறது. மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) கூறியுள்ளவாறு "குற்றச்செயலுக்கு பொறுப்புடைய தனிநபர்களை நீதிக்கு முன் நிறுத்தாமல் விடுவதும் உரிய விசாரணையோ தண்டனையோ வழங்காமலிருப்பதும் இக்கடப்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளும் செயலாகும்". (ICCPR) (Human Rights Committee, General Comment 31), "Nature of the Legal Obligation on State Parties to the Covenant" (2004), CCPR/C/21/Rev.1/Add.13;CHR Resolution 2004/37 para.18.) தனிநபர் ஒருவர் 'மீறும்' போது அதனைத் தடுப்பதற்குரிய சட்டரீதியான வழிவகைகளைச் செய்யாமலிந்த குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் உட்படும். அவ்வாறே அரச ஸ்தாபனமோ அல்லது அரசின் முகவரான உத்தியோகத்தர் ஒருவரோ 'மீறும்' போது அரசாங்கமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். (E/CN.4/2005/7, paras. 71-75) காவலில் இருக்கும்பொழுது ஒருவர் மரணமடைந்தால் அரசாங்கம் இரண்டு வழிகளிலும் பொறுப்பேற்க வேண்டும். (Dermit Barbato v. Uruguoy, HRC, No. 84/1981 (1990), para. 902.)

[38] பொலிஸ் திணைக்களத்தின் ஒழுக்காற்று செயன்முறைகள் மூத்த உயர் அதிகாரிகள் சம்பந்தப்படும்பொழுது மிகக்குறைந்தளவு செயற்றிறன் உடையதாக இருக்கின்றதைக் காணக்கூடியதாயிருக்கிறது. திணைக்களரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி கிட்டத்தட்ட எப்பொழுதுமே குறைந்த அதிகார மட்டத்திலிருக்கின்ற சாதாரண ஊழியர்கள் மீதே ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று தெரியவருகிறது. சித்திரவதை, கொலை, மரணம் போன்றவற்றில் சம்பந்தப்படும் உயர் அதிகார மட்டத்திலிருப்பவர்களை விசாரிக்கவும் தண்டிக்கவும் திணைக்களங்களில் உறுதியான "விருப்பமின்மை" நிலவுகிறது. 2001 இல் கொன்ஸ்டபிள் தரத்திலுள்ள பொலிஸாரில் 86% ஒழுக்காற்று நடவடிக்கைக்குள்ளானபோது சுப்பிரண்ட் என்று அழைக்கப்படும் மேலதிகாரி தரத்திலுள்ளவர்கள் 0.04% பேர் மாத்திரமே பொறுப்புக்கூற வேண்டியவர்களாக அடையாளங் காணப்பட்டனர். (Sri Lanka Administration Report 2001, Appendix 1, Table 6.)

[39] கிரிமினல் நீதித்துறையிலுள்ள குறைகள் உயிர்வாழும் உரிமை, சித்திரவதையிலிருந்து பாதுகாக்கப்படல் போன்ற அடிப்படை மனித உரிமைகளை பேண முயற்சிக்கும் யாப்பின் செயலூக்கத்தை பாதிக்கவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட வேண்டும். கடந்த இரண்டு வருடங்களில் உயர்நீதிமன்றம் (Supreme Court) இவ்வாறான பல வழக்குகளில் நட்டஈடு

வழங்குமாறு தீர்ப்பளித்திருக்கிறது. நட்டஈடு வழங்குவதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் தருவது நியாயாதிக்கத்தின் ஒரு பிரதான அம்சமென்றபோதிலும் குற்றவாளி தண்டிக்கப்படுவதற்கு மாற்றீடாக நட்டஈடு வழங்கப்படலாகாது. இலங்கையில் நீதிமன்றம் நட்டஈட்டின் எப்பகுதி அரசாங்கத்தினாலும் எவ்வளவு குற்றவாளியான அதிகாரியால் தரப்படவேண்டும் என்று தீர்மானிக்கிறது. WMGM பெரேரா என்பவர் கொல்லப்பட்ட பிரபல்யமான ஒரு வழக்கில் வழங்கப்பட்ட நட்டஈட்டின் நாலில் ஒரு பகுதியைவிட குறைவானவொரு தொகையே குற்றவாளிகளாகக் காணப்பட்ட அதிகாரிகள் தரவேண்டியவர்களாகவும் மிகுதி முழுவதும் அரசாங்கத்தினது பொறுப்பிலும் தீர்ப்பளிக்கப்பட்டது.

[40] இது 1996ம் ஆண்டில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட 18 வயது உயர்கல்லூரி மாணவியும் அவரைத் தேடிச் சென்ற குடும்பத்தவர்கள் கொலை செய்யப்பட்டதுமான வழக்காகும்.

[41] ஆகஸ்ட் 10, 2005 திகதியிடப்பட்ட கடிதம். E/CN.4/2006/53/Add.1

[42] மார்ச் 8, 2001 இல் அரசாங்கம் இப்படுகொலையை விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை அமைத்தது. இவ்வாணைக்குழு கிராமத்தவர்கள் முகாமுக்கு முன்னால் போராட்டமொன்றை நடத்துவதற்கு திட்டமிடுவதைத் தெரிந்திருந்தும் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காகவும், தமது காவலில் இருந்தவர்களை காப்பாற்றத் தவறிய சக உத்தியோகத்தர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காதிருந்தமைக்காகவும் பல உள்ளூர் பொலிஸ் அதிகாரிகளைக் குற்றவாளிகளாக இனங்கண்டது (அறிக்கையில் அதிகாரிகளின் பெயர்களும் உத்தியோகத் தரமும் குறிப்பிடப்பட்டிருந்தது). தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (National Human Rights Commission) தனது விசாரணையின் பின் 'காவலிலிருந்த கைதிகளின் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்த உள்ளூர் மக்கள் ஆத்திரமடைந்து திடீரென்று முகாமைத் தாக்கினார்கள் என்று கூற எதுவித ஆதாரமும் இல்லை என்றும் இது முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன' என்றும் அறிக்கையிட்டுள்ளது. (Human Rights Commission of Sri Lanka, 25 October 2000, 1 Nov.2000, p.16) மேலும் இவ்வாணைக்குழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 60 பேரளவில் 'கைதிகள் தாக்கப்பட்டபோது அதனைத் தடுக்காமலும் கைதிகளைப் பாதுகாக்காமலும் தமது கடமையிலிருந்து பாரதூரமாகத் தவறிய குற்றத்திற்கு ஆளாகியதாக' தெரிவிக்கின்றது. *Ibid., p.12*

[43] பிரேத பரிசோதனை செய்தபின்னர், உள்ளூர் கிராமத்தவர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட 56 பேரை பொலிஸார் கைது செய்தனர். கொல்லப்பட்டவர்களில் 17 பேரை பிரேதஅறையில் வைத்து குடும்பத்தவர்கள் அடையாளம் காண்டபொழுதும் ஏனைய 10 கைதிகளின் உறவினர்கள் மிகவும் மோசமாக தாக்கப்பட்டிருந்த அவ்வுடல்களை அடையாளம் காண முடியாது மறுத்தனர். அவர்களில் 4 தாய்மார்களை எனது விஜயத்தின்போது நான் சந்தித்தேன். சம்பவம் நடந்தபின் அதிகாரிகளின் வேண்டுகோளின்படி உடனடியாகவே அவர்கள் DNA பரிசோதனைக்காக தமது இரத்த மாதிரியைக் கொடுத்திருந்தார்கள். அம்மாதிரிகள் இரத்தப் பரிசோதனைக்காக டெல்லியிலுள்ள DNA பரிசோதனைக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். எனக்கு கிடைத்த தகவல்களின்படி அப்பரிசோதனை முடிவுகள் இன்னும் தாய்மாருக்கு தெரிவிக்கப்படவில்லை. இவ்விடயத்தை அரசாங்கம் உடனடியாக கவனத்திற்கெடுத்து ஆவன செய்யவேண்டும். கொலைக்குற்றம் உட்பட பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 41 பேர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதிய தகவல்கள் இல்லையென்ற அடிப்படையில் அவர்களில் 23 பேர் விடுவிக்கப்பட்டனர். எஞ்சிய 18 பேர்மீது வழக்கு நடந்தது. அவர்களில் 13 பேர் போதுமான சாட்சியங்கள் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டனர். ஜூலை 1, 2003 இல் கொழும்பு மேல்நீதிமன்றம் எஞ்சியிருந்த

5 பேரையும் குற்றவாளிகளாகக் கண்டு மரண தண்டனை விதித்தது. பின்னர் உயர்நீதிமன்றம் 5 பேரில் ஒருவரை, பண்டாரவளையைச் சேர்ந்த உதவி-பொலிஸ் இன்ஸ்பெக்டர், போதிய சாட்சியங்கள் இல்லையென்ற அடிப்படையில் விடுதலை செய்தது. மே 27, 2005 இல் உயர்நீதிமன்றம் மிகுதி நால்வரையும் மீண்டும் சாட்சியங்கள் போதாதென்ற கோதாவில் விடுதலை செய்தது. ஆணைக்குழுவின் அறிக்கையில் அடையாளங்காணப்பட்ட உயர் அதிகாரமட்டத்திலிருந்த அதிகாரிகள் இருவர்மீதும் இன்றுவரை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவோ குற்றவியல் சட்டப்படி வழக்குத் தாக்கல் செய்யப்படவோ இல்லை.

[44] அநேக இலங்கையர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வழக்கின் சட்டரீதியான நுணுக்கங்களைவிடவும் அவற்றிற்கு வழங்கப்படும் தீர்ப்பு விளங்கிக்கொள்ளத்தக்கபடி அதிக கவனத்தைப் பெறுவதாகும். நியாயப்படி தீர்ப்பளிக்கப்பளிக்கப்படாத பிந்துனுவென சம்பவத்திற்கு நேர் மாறாக விரைவாகவும் திறமையாகவும் புலனாய்வு செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட 2004 நவம்பர் உயர்நீதிமன்ற நீதிபதியான சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கு திகழ்ந்தது. 7 மாதங்களுக்குள் புலன்விசாரணைகளும் விசாரணையும் முடிந்து வழக்கும் தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கின் வெற்றி பிரதான இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டுகிறது. முதலாவதாக, சாட்சிகள் சிலர் பயமுறுத்தப்பட்டு, மிரட்டப்பட்டபோதும் அவர்களில் எவரும் தமது சாட்சியங்களிலிருந்து பின்வாங்கவோ முன்னுப்பின் முரணான சாட்சியமளிக்கவோ இல்லை. அதுமாத்திரமின்றி வேறுபல கிரிமினல் வழக்குகளில் நிகழ்ந்ததைப்போல உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சாட்சிகள் எவரும் துன்புறுத்தப்படவோ தாக்கப்படவோ இல்லை. இரண்டாவதாக நுணுக்கமான தடயவியல் சார் விசாரணை – DNA பரிசோதனை உட்பட – வழக்கிற்கு உதவியது. இலங்கைப் பொலிஸ் திணைக்களம், நீதிமன்றம், நீதி முறைமை என்பன சட்டவிரோதமான படுகொலைகளை விசாரித்து தீர்ப்பு வழங்கக்கூடிய தகமையைக் கொண்டிருக்கிறது என்பதை அம்பேபிட்டிய வழக்கு நிரூபித்தது. இருந்தபோதிலும் பொதுமக்களின் மனதில் ஒரு வழக்கில் விரைவாகவும் திறமையாகவும் நீதி வழங்கப்படுவதென்பது குற்றத்தை விசாரிப்பதிலுள்ள சிக்கலை விடவும் கொலை செய்யப்பட்டவர் யார் என்பதில்தான் தங்கியிருக்கிறது என்ற அபிப்பிராயமே நிலைநாட்டப்பட்டுள்ளது. சகலருக்கும் நீதி வழங்குவதை உறுதிப்படுத்த உரிய சீரமைப்புகளைச் செய்வது அவசியமாகவிருக்கிறது.

[45] பார்க்க Human Rights Commission of Sri Lanka Act of August 1996 available at http://www.hrc-srilanka.org/docs/HRActe.pdf. 2002ம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாப்பின் ஏழாவது திருத்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.

[46] ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்திற்கு மேலதிகமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு (NPC) 'எந்தவொரு பாதிக்கப்பட்ட தனிநபரிடமிருந்தும் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு எதிரான முறைப்பாட்டைப் பெறவும் விசாரணை செய்யவும்' சட்டப்படி அதிகாரம் உள்ளது (Constitution, Article 155 (G) (2). NPC யின் Public Complaints Investigation Unit (PCIU) ஒக்டோபர் 2004 தொடக்கம் இயங்கிவருகிறது. மையப்படுத்தப்பட்ட ஒரு அதிகாரி படுகொலை, சித்திரவதை போன்ற பாரதூரமான குற்றச்சாட்டுகளை விசாரித்து, உரிய ஒழுக்காற்று நடவடிக்கையை அடையாளங் கண்ட பின்பு வழக்கை சட்டமா அதிபரிடம் கையளிப்பார். பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை போன்ற ஏனைய முறைப்பாடுகள் உள்ளூர் பொலிஸ்நிலையத்துடன் நேரடியாக தொடர்பு வைத்திருக்கும் கள உத்தியோகத்தர் ஒருவரிடம் விசாரணைக்காக கையளிக்கப்படும். இவற்றிற்கு மேலதிகமாக சில முறைப்பாடுகள் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் (IGP) கொடுக்கப்படும். NPC க்கு உரிய வளங்களும் அரசியல் ஆதரவும் கிட்டும்பட்சத்தில் இச்செயற்பாட்டு முறை நல்ல பயனைத் தரக்கூடியதாகும்.

[47] ஆணையாளரின் சேவைக்காலம் முடிவடைந்த பின் புதிய உறுப்பினர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லையாதலால் NPC செயலகத்தை மாத்திரமே என்னால் சந்திக்கமுடிந்தது.

www.tamilarangam.net

செயற்குழு உறுப்பினர்களை நியமிப்பதில் ஏற்பட்ட அரசியல் தலையீடுகளினால் இத்தாமதம் ஏற்பட்டது. யாப்பின் ஏழாவது திருத்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சுதந்திரமான ஆணைக்குழுக்களின் செயற்பாட்டை விரும்பாத அரசியல் தலைமைகள் அவற்றை முடக்க விரும்புகின்றன என்று சிலர் கருதினார்கள். இவ்வறிக்கையை எழுதும் இந்நேரத்திலும் இந்நிலமை சீரடையவில்லை என்பது துயரமானதே. "Govt keen to resolve CC impasse", *Daily News*, 17 December 2005.

[48] 'பொலிஸ்மா அதிபர் தவிர பொலிஸ் நியமனம், பதிவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று செயன்முறை, கட்டுப்பாடு, பதவிநீக்கம் என்பன பொலிஸ் ஆணைக்குழுவின் பொறுப்பில் விடப்படவேண்டும். மேற்குறிப்பிட்டவை தொடர்பாக ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.' Constitution, Ariticle 155 (G)(1)(a).

[49] ICCயின் செயற்பாட்டைத் தற்காலிகமாக கட்டுப்படுத்தும் சரத்து 124 கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்து கைச்சாத்திடலை மேற்கொள்ளலாம்.

[50] இப்பரிந்துரைகள் முழுமையானவையல்ல. சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை மாத்திரமே இவை குறிப்பாக சுட்டிக் காட்டுகின்றன.

[51] இதே போன்ற பரிந்துரைகள் முன்னர் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் (National Human Rights Commision) முன்வைக்கப்பட்டிருப்பதை நான் அவதானித்தேன். பார்க்க *The Human Rights Situation in the Eastern Province: Update* (April 2005), page 24.

[52] இப்பரிந்துரைகள் முன்னர் சித்திரவதைக்கெதிரான அமைப்பு (Committee Against Torture), மனித உரிமைகள் அமைப்பு (Humen Rights Committee) போன்றவற்றினாலும் வழங்கப்பட்டிருப்பதை நான் அவதானித்தேன். பார்க்க CAT, Concluding Observations on the Second Periodic Report of Sri Lanka (25 Nov. 2005), para.7; HRC, Concluding Observations (1/12/2003), para.9.

[53] யாப்பின் சரத்து 155 G (1)(a). இவ்வதிகாரத்தை NPC வேறு யாருக்கும் கையளித்துவிடக் கூடும். ஆனால் இதுவரையில் அவ்வாறு செய்யவில்லை. ஆனால் அவ்வாறு செய்வது கூடாது. பார்க்க Article 155J.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு

## பயணத்தின் நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை சோசலிஸ ஜனநாயகக் குடியரசின் அழைப்பின்பேரில் நான் நவம்பர் 28 தொடக்கம் டிசம்பர் 6, 2005 வரையான காலப்பகுதியில் இலங்கைக்குச் சென்றிருந்தேன். நான் கொழும்பில் தங்கிநின்றதற்கு மேலதிகமாக மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தேன். வெளிவிவகார அமைச்சர் உட்பட, சட்ட மாஅதிபர், பொலிஸ் மாஅதிபர், இலங்கை இராணுவ உயரதிகாரிகள் (பிரதான தலைமையகத்திலும் பிரதேச தலைமை அலுவலகங்களிலும்), மாவட்ட பொலிஸ் சுப்பிரிண்டன்கள் ஆகியோரைச் சந்தித்ததுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரையும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவையும் சந்தித்தேன். LTTEயின் அரசியல் பிரிவுத் தலைவர் உட்பட, அவர்களது காவற்படை தலைவர், நீதித்துறை தலைவர், தலைமை நீதிபதி, கிழக்குப் பிராந்தியத்தின் பிரதிநிதி, மற்றும் LTTEயின் மனித உரிமைகள் அமைப்பு (the North-East Secretariat of Human Rights – NESOHR) மற்றும் இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு (SLMM), ICRC, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி, United Nations Country Team இன் அங்கத்தவர்கள் போன்றவர்களையும் சந்தித்தேன். சட்டவிரோதமான படுகொலைகள் சிலவற்றின் சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், பல்வேறு அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்ததுடன் இலங்கை சிவில் சமூகத்தைச் சேர்ந்த பலரையும் சந்தித்தேன். நான் சந்தித்த அனைவருக்கும் அவர்கள் மனமுவந்து செய்த உதவிகளுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். எனது விஜயத்திற்கு மிகவும் துணையாயிருந்த ஐக்கிய நாடுகளின் உள்நாட்டுக் குழு (United Nations Country Team) வின் மூத்த மனித உரிமைகள் ஆலோசகருக்கு குறிப்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் உள்ளார்ந்த உதவி செய்த UNDP க்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**ABOUT THIS TRANSLATION**

This is a translation into Tamil of the report of the United Nations Special Rapporteur on extrajudicial, summary or arbitrary executions, Philip Alston, on his visit from Sri Lanka from 28 November to 6 December 2005 (UN document E/CN.4/2006/53/Add.5).

This unofficial translation was commissioned by the Project on Extrajudicial Executions of the Center for Human Rights and Global Justice, New York University School of Law. This translation is not a United Nations document.

Electronic copies of this translation and of the original and only official version are available on the Project's web site at http://www.extrajudicialexecutions.org/



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்